விலை ரூபா: 08.00

Registered as a Newspaper in Srilanka

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 05 வியாழக்கிழமை (19.05.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 151

ராம்கோ
MADRAS CEMENTS LTD
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
RAMCO CEMENT
சீமெந்து

# சமாதான முயற்சிகள் வெற்றிபெற அரசு புலிகள் இணையவேண்டும்

## ஜனாதிபதிக்கு உதவிவழங்கும் நாடுகள் அழுத்தம்

(நமது நிருபர்)

**பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் மட்டுமன்றி, சமாதான முயற்சிகளிலும் விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படுமாறு ஜனாதிபதிக்கு உதவிவழங்கும் நாடுகள் அழுத்திக் கூறியதாக இராஜதந்திரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.**

நேற்று நடைபெற்ற கூட்டமொன்றின்போது அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

பணம் ஒருபொருட்டல்ல, சமாதானமே இன்றைய முக்கிய தேவையாகும். மூன்று பில்லியன் டொலர்களை சுனாமி நிவாரண நிதியத்திற்கு உதவிவழங்க முன்வந்துள்ளமையானது விடுதலைப் புலிகளும், அரசும் தொடர்ந்தும் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அன்ரன் பாலசிங்கம் - சொல்ஹெய்ம் நேற்று லண்டனில் முக்கிய பேச்சு

(லண்டன்)

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நேற்று லண்டனில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இரண்டுமணிநேரம் நடைபெற்ற இச்சந்திப்பில் நோர்வே வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த லீசா கோல்டனும் கலந்துகொண்டார்.

இச்சந்திப்பின்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பகுதிகளின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்வதற்காக அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் உருவாக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்பில் கையொப்பமிடுவதற்கான பூர்வாங்க வேலைகள் தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த 16 ஆம், 17 ஆம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை நகரசபைத் தலைவர் மீது சூடு

(திருகோணமலை)

திருகோணமலை நகரசபைத் தலைவர் பி.சூரியமூர்த்தி நேற்றிரவு 9.30 மணியளவில் இனந்தெரியாதோரால் சுடப்பட்டுள்ளார். சுடப்பட்ட அவர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

## ஜனாதிபதி - ஜே.வி.பி இரகசியச் சந்திப்பு?

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கும், ஜே.வி.பியின் முக்கிய பிரமுகர்களுக்கும் இடையே முக்கிய சந்திப்பொன்று இரகசியமாக இடம்பெற்றதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தை அடுத்து ஜனாதிபதியின் அழைப்பின்பேரில் இச்சந்திப்புக்கு ஏற்பாடுசெய்யப்பட்டதாகத் தெரியவருகிறது. உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் வரையறுக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஜே.வி.பியின் முக்கிய பிரமுகர்களுக்கு ஜனாதிபதி இச்சந்திப்பில் விளக்கியிருப்பதாகத் தெரியவருகிறது.

அத்துடன் பொதுக்கட்டமைப்பை உருவாக்க ஜே.வி.பி ஆதரவு வழங்கவேண்டியது அவசியமென்றும், ஜே.வி.பியினரின் ஆதரவின் முக்கியத்துவம் குறித்தும் ஜனாதிபதி இச்சந்திப்பில் கோரியதாகவும், அதற்கு ஜே.வி.பி மறுப்பும் தெரிவித்ததாகவும், பின்னர் நிபந்தனையுடனான பொதுக்கட்டமைப்பொன்றின் உருவாக்கத்திற்கு ஜே.வி.பி இணங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## மாமனிதர் டி.சிவராமிற்கு யாழில் அஞ்சலி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பிரபல ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமிற்கு யாழ். நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் நிலைய இணைப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் பிற்பகல் 3.30 மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமானது.

தமிழீழ தேசியக் கொடியினை யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கண்ணன் ஏற்றினார். பொதுச்சுடரினை மேஜர் ரஞ்சனின் தந்தையார் தம்பிராசாவும், மாமனிதர் சிவராமின் உருவப்படத்திற்கான சுடரினை தேசிய எழுச்சிப்பேரவையைச் சேர்ந்த சிறிலும் ஏற்றினர். மலர்மாலையினை மூத்த பத்திரிகையாளர் கோபாலரத்தின (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தொடர்ந்தும் பதற்றம்

(திருகோணமலை)

திருகோணமலை நகரின் மையப் பகுதியில் அமைக்கப்பட்ட புத்தர்சிலை விவகாரத்தினை அடுத்து நேற்றும் பதற்ற நிலை காணப்பட்டது. புத்தர் சிலையினை அகற்றக்கோரி தமிழ்மக்கள் பேரவையினர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக நேற்று இரண்டாவது நாளாகவும் திருகோணமலையில் ஹர்த்தால், கடையடைப்பு என்பன இடம்பெற்றன.

இதன் விளைவாக நகரம் முழுவதும் நேற்று முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தது. திருகோணமலையில் நிலவும் பதற்றம் காரணமாக மக்கள் வீதிக்குவர அஞ்சுகின்றனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் மாலை 10 ஆம் குறிச்சிப் பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட கம்பனிப் பிள்ளையார் ஆலயப் பகுதி, அதனை அடுத்துள்ள பகுதிகள் மற்றும் மடத்தடிப்பகுதி, மாவட்டப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் நேற்றுச் சென்று பார்வையிட்டனர்.

இவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் குண்டுவீச்சினால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

மேலும் நேற்று முன்தினம் மாலை மத்தியவீதியில் வைத்து தாக்குதலுக்கு இலக்கான சபாரத்தினம் பவனீஸ்வரன் குண

(12 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் நிலைய இணைப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் பிற்பகல் 3.30 மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமானது.

வப்படத்திற்கான சுடரினை தேசிய எழுச்சிப்பேரவையைச் சேர்ந்த சிறிலும் ஏற்றினர். மலர்மாலையினை மூத்த பத்திரிகையாளர் கோபாலரத்தின (12 ஆம் பக்கம் பார்க்க)

வேண்டுகோளுக்கு அமைவாக நேற்று இரண்டாவது நாளாகவும் திருகோணமலையில் ஹர்த்தால், கடையடைப்பு என்பன இடம்பெற்றன.

பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட கம்பனிப் பிள்ளையார் ஆலயப் பகுதி, அதனை அடுத்துள்ள பகுதிகள் மற்றும் மடத்தடிப்பகுதி, மாவட்டப் போர்

மேலும் நேற்று முன்தினம் மாலை மத்தியவீதியில் வைத்து தாக்குதலுக்கு இலக்கான சபாரத்தினம் பவனீஸ்வரன் குண

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புத்தர்சிலையை அகற்ற நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

திருகோணமலையில் அனுமதிபெறாது இரகசியமான முறையில் அமைக்கப்பட்ட புத்தர்சிலையைத் தற்காலிகமாக அகற்றுமாறு திருமலை மாவட்ட நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராஜா பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஞாயிறன்று எவரது அனுமதியும்பெறாது அமைக்கப்பட்ட புத்தர்சிலை விவகாரம் நீதிமன்றம்வரை சென்றது. சிலை அமைக்கப்பட்டமை தொடர்பான வழக்கு நேற்று மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. காலை 10.15 மணிக்கு நீதிவான் கணேசராஜா விசாரணைக்கு எடுத்தார்.

அங்கு பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த விஜயசூரிய வழங்கினை நெறிப்படுத்தினார். பிரதிவாதிகளாக திருகோணமலைப் பட்டனமும் சூழலும் பிரதேச செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், நகர சபையின் செயலாளர் க.விபுலானந்தன், திருகோணமலை தலைமைப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி குணவர்த்தன, திருமலை ஓட்டோ ஓட்டுநர் நலன்புரிச் சங்கச் செயலாளர் கீர்த்தி பிறேம

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் பலத்த பாதுகாப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களை அடுத்து அங்கு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நகரம், கல்முனை வாழைச்சேனை உட்பட முக்கிய இடங்களில் பெருமளவிலான இராணுவம், பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து விசேட பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

சுற்றிவளைப்புத் தேடுதல்கள், சந்தேகத்திற்கிடமானமுறையில் காணப்படுபவர்களை விசேட விசாரணைகளுக்கு உட்படுத்தல் போன்ற செயற்பாடுகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். (ச-8)

# பொலிஸ் பாதுகாப்புடன் சென்ற ஈ.பி.டி.பி உறுப்பினர் சுட்டுக்கொலை

## மட்டக்களப்பு நகரில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் பொலிஸ் பாதுகாப்புடன் சென்ற ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் நேற்று முற்பகல் 9.30 மணியளவில் அடையாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மட்டு. நகரிலுள்ள பொதுச் சந்தையின் வாசலில் வைத்து அவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். சுட்டுக்கொல்லப்பட்டவர் மோகன் எனப்படும் ஆறுமுகம் முருகுப்பிள்ளை (வயது 35) எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தின்போது பாலமீன் மடுவைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நவரத்தினம் (வயது50) என்பவரும் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

குறிப்பிட்ட ஈ.பி.டி.பி உறுப்பினர் தனது காரியாலயத்திலிருந்து பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் பாதுகாப்புடன் பொதுச் சந்தைக்குச் சென்று பொருட்களைக் கொள்வனவு செய்துவிட்டு வெளியேறிய போது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாதுகாப்புக்குச்சென்ற பொலிஸ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...

யாழ் - கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 2349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


# உத்தேசப் பொதுக்கட்டமைப்பு நாட்டின் இறைமைக்கு ஊறுவிளைவிக்காது

## -ஜனாதிபதி

(கொழும்பு)

உத்தேசப் பொதுக்கட்டமைப்பு இலங்கையின் இறைமைக்கு ஊறுவிளைவிக்கமாட்டாது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.



இந்தக் கட்டமைப்புக்கு எதிராகக் கடுமையான கண்டனங்களும் கேள்விகணைகளும் தொடர்ந்தாலும் மாற்று யோசனைகளை முன்மொழிவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அரச வானொலிக்கு நேற்று முன்தினம் வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுனாமி நிவாரணக் கட்டமைப்பின முக்கிய பணியாக அமைவது வடக்கு-கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோரப் பகுதிகளை மீளக்கட்டியெழுப்புவதாகும். கடற்கரையிலிருந்து 2 கிலோமற்றருக்கு உட்பட்ட வலயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்நிர்மாணப் பணிகளை இனங்காணும் பொறுப்பு அதனிடம் வழங்கப்படும்.

இதற்காக அமுல்படுத்தப்படும் திட்டங்களுக்கு நிதியமைச்சின் ஊடாக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படும். சுனாமி நிவாரணக் கட்டமைப்புக்காக பிரத்தியேக நிதியொதுக்கீடுகள் மேற்கொள்ளப்படும். நிவாரண[illegible] அமைப்பு தேசிய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் மாத்திரமன்றி மாவட்ட மட்டத்திலும் அமுல்செய்யப்படும்.

இதுதொடர்பான குழுக்களில் அந்தந்த மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆகியோர் அங்கம்வகிப்பர்.

மாகாண மட்டக் குழுவில் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த 5 பேரும் தமிழ் பேசும் சமூகத்தைச் சேர்ந்த 5பேரும் நியமிக்கப்படுவர்.

விடுதலைப்புலிகள் நாட்டின் இறைமையை அங்கீகரித்து அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட முன் வந்திருக்கின்றனர். சிங்கள,முஸ்லிம் மக்களும் விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர்.

உத்தேசப் பொதுக்கட்டமைப்பு சமாதான நடைமுறையின் அம்சமாக அமையாத போதும், அது சமாதான முயற்சிகளுக்கான வலுவான அடித்தளமாக அமையும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் சுனாமியினால் மட்டுமன்றி இரு தசாப்த காலமாக இடம்பெற்ற போரினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கினை மீளக்கட்டியெழுப்புவதற்கு சகல அதிகாரங்களையும் கொண்ட விசேட செயலணியினை அமைப்பதே ஆளும் கூட்டணியின் ஒரே நோக்கமாகும்.

அதிகாரப் பரவலாக்கம் இல்லாமல் இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணமுடியாது. சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக பொதுமக்களின் கோரிக்கைகளை ஏற்று அரசாங்கம் அனுஷ்டிக்கவிருக்கும் நடைமுறைகள் பற்றி பின்னர் அறிவிக்கப் போவதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ற-4)

## காலாவதியான பொருட்கள்

(மருதங்கேணி)

நெல்லியடி நகரப் பகுதியிலுள்ள கடைகளில் பொது சுகாதாரப் பரிசோதகர் தலைமையிலான குழுவொன்றினால் கடந்த திங்கட்கிழமை திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பெருமளவான காலாவதியான பொருட்கள் கைப்பற்றப்பட்டதுடன் அவை சட்ட நடவடிக்கைக்காக நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் பிஸ்கட் வகைகள், இனிப்பு வகை, பால்மா என்பன அடங்கும். (க-7,35)

## களநிலை ஆய்வு

(தென்மராட்சி)

இலங்கைக்கான சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் நிதியுதவியுடன் அறவழிப் போராட்டக்குழு, தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சந்திரபுரம் மற்றும் சரசாலை தெற்கு ஆகிய பகுதிகளில் சிறுவர்கள தொடர்பான களநிலை ஆய்வினை ஆரம்பித்துள்ளது.

இந்த ஆய்வுப் பணியில் இரு கிராமங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட பன்னிரண்டு யுவதிகள் தற்போது ஈடுபட்டுள்ளனர். (க-16)

# அனைத்துத் தரப்பினரும் இணைந்து செயற்படுவதே அதிக பலனைத் தரும்

## பில் கிளின்ரன்

(கண்டி)

சுனாமி நிவாரண நிதிகளை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும்போது அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டுமென முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்ரன் தெரிவித்துள்ளார்.

இந்நிவாரணக் கட்டமைப்பிற்கு தனியார் நிறுவனங்களதும், அரச சார்பற்ற நிறுவனங்களினதும் பங்களிப்பு அளப்பரிய ஒன்றாகும்.

நேற்று முன்தினம் கண்டியில் ஆரம்பமான உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் பில்கிளின்ரனின் உரை ஒலிபரப்புச் செய்யப்பட்டது.

சுனாமி போன்ற அனர்த்தங்கள் இடம்பெறும் போது அனைவரும் பாகுபாடு காட்டாமல் இணைந்து செயற்பட வேண்டும். நிவாரணங்களைப் பகிர்ந்து அளிப்பதனையோ மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கைகளையோ அரசாங்கத்தால் மட்டும் செயல்படுத்துவது இயலாத காரியம்.ஆகவே சகல தரப்பினரும் இணைந்தே செயற்பட வேண்டும்.

அரச அமைப்புக்களும், அரச சார்பற்ற அமைப்புக்களும் பொதுவான ஒரு திட்டத்தின் கீழ் இணைந்து செயல்படுவது அதிக பலனைத் தரும் என அவர் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.(ற-4)

# புரிந்துணர்வு உடன்படிக்கை பேணப்படுவது குறித்து

## அரசுக்கும் புலிகளுக்கும் உலகவங்கி பாராட்டு

(கண்டி)

இலங்கையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை மூன்று வருடங்களுக்கு மேலாகப் பேணப்படுவது தொடர்பில் சம்பந்தப்பட்டுள்ள அனைத்துத் தரப்பினரையும் குறிப்பாக அரசாங்கத்தையும், விடுதலைப் புலிகளையும் பாராட்டுவதாக உலகவங்கியின் உதவித் தலைவர் வி.பட்டேல் தெரிவித்தார்.

உதவி வழங்கும் நாடுகளின் கண்டி மாநாட்டின் ஆரம்ப அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட இலங்கையினை மீளக்கட்டியெழுப்பும் விடயத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் உருவாக்கவுள்ள பொதுக்கட்டமைப்புக்கு அபிவிருத்திக்கான பங்காளிகள் என்ற வகையில் தங்களது முழுமையான ஆதரவு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

எல்லாவற்றிற்கும் மேலாக சுனாமி மீள் கட்டமைப்புப் பணிகளே அனைவரும் எதிர்நோக்கும் பாரிய சவாலாகும்.

எவ்வாறாயினும் உதவி வழங்கும் சர்வதேச சமூகம் வழங்கிய உறுதிமொழிகளுக்கு அமைய முதலீடு செய்வது கஷ்டமான காரியமல்ல எனக் குறிப்பிட்ட அவர், இந்த மாநாட்டில் அது பற்றி கவனம் செலுத்தப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

சுனாமியினால் இடம்பெயர்ந்த மக்களான இடைத்தங்கல் வீடுகளில் குடியேற்றும் பொருட்டு தேவையான காணிகளைத் தேர்ந்தெடுப்பதே முக்கியமான பணியாகவுள்ளது.

100 மீற்றர் எல்லை விடயத்தில மனிதாபிமான ரீதியாகவும் நடைமுறை சாத்தியத்திற்கு ஒப்பானதாகவும் செயற்படுவது குறித்து கவனத்தில் கொள்ள வேண்டும்.

சுனாமி மீள் கட்டமைப்புக்குப் புறம்பாக வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரம் மற்றும் [illegible] நடவடிக்கைகள் வறுமை ஒழிப்பு [illegible] ஆகியவற்றிற்கு உதவி வழங்கும் சமூகம் ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவிருப்பதாகவும் உலக வங்கியின் பிரதித் தலைவர் மேலும தெரிவித்தார். (ற-4)

# 13 மாவட்டங்களில் 100 சிறுவர் பூங்காக்கள்!

## அமைக்க அமெ. திட்டம்

(கொழும்பு)

இலங்கையில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 13 மாவட்டங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்காக 100 சிறுவர் பூங்காக்களை அமைக்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட கரையோரப் பகுதிகளில் புஷ், கிளின்ரன், ஹேஸ்டன் சுனாமி நிவாரண நிதியத்தின் நிதியுதவியோடு இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

உள்ளூராட்சி நிறுவனங்களின் வழிகாட்டலோடு இந்த சிறுவர் பூங்காக்கள் அமைக்கப்படும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் பொது உறவுகளை வ்ளர்த்தெடுப்பது மற்றும் சுனாமியினால் பாதிக்கபபட்ட இலங்கைக் குழந்தைகளின் நலன்களைக் கட்டியெழுப்புவதற்கும் இந்த சிறுவர் பூங்கர்க்கள் பேருதவியாக அமையலாம் என்று இலங்கைக் கான அமெரிக்கத் தூதுவர் ஜெவ்ரிலம்ஸ்டெட் தெரிவித்தார்.

சர்வதேச நிபுணர்கள் அடங்கிய குழுவினர் இலங்கையில் மேற்கொண்ட விஜயத்தின் பின்னர் இந்தத் திட்டத்தினை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டதாகவும் இந்தப் பூங்காக்களை அமைக்கும் இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் 18 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-4)

# வைகாசிப் பொங்கல் இம்முறை இல்லை

(சாவகச்சேரி)

தென்மராட்சி சோலையம்மன் ஆலயத்தில் வருடாந்தம் வைகாசி விசாக தினத்தையொட்டி இடம்பெற்றுவரும் காவடி நேர்த்தி நிறைவுப் பொங்கல் வைபவம் இம்முறை இடம்பெறமாட்டாதென ஆலய பிரதமகுரு கிருபானந்தக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

ஆலயத்தில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு கட்டட வேலைகள் இடம்பெற்று வருவதனால் வேலைகள் பூர்த்தியாகி கும்பாபிஷேகம் இடம்பெற்ற பின்னரே நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக்கொளளலாமெனவும் ஆலய குரு தெரிவித்துளளார். (க-7,21)

# தற்பாதுகாப்புக்காகப் பிரயோகிக்கப்பட்ட துப்பாக்கிச் சூட்டிலேயே சிவிலியன் மரணம்

## மட்டு. நீதிமன்றம் தீர்ப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சந்திவெளியில் இராணுவத்தினருக்கெதிரான ஆர்ப்பாட்டத்தின்போது இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த 70வயது முதியவரான யுவன் அப்பு கந்தசாமியின் மரணம் தொடர்பான விசாரணை நேற்று முன்தினம் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது.

பொலிஸ் மற்றும் இராணுவத்தினருக்கு உயிராபத்து விளைவிக்கக்கூடிய வகையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் நடந்து கொண்டதால் அவர்களைக் கலைப்பதற்கு இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இந்த மரணம் இடம்பெற்றதாக ஏறாவூர் பொலிஸார் இது பற்றி சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டு பொலிஸ் அதிகாரிகளும் ஒரு இராணுவ அதிகாரியும் மற்றும் மரணமானவரின் இரண்டு பிள்ளைகள் உட்பட மூன்று சிவிலியன்களும் இந்த விசாரணையின் போது சாட்சியமளித்தார்கள்.

குறிப்பிட்ட சாட்சியங்களைப் பதிவு செய்து கொண்ட நீதிபதி ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்காக தற்காப்புக் கருதி பிரயோகிக்கப்பட்ட துப்பாக்கிச் சூட்டினால் இந்த மரணம் ஏற்பட்டது எனக் குறிப்பிட்டு இந்த மரணத்தில் குற்றம புரியப்பட்டமைக்கான சந்தேகம் எதுவும் இல்லை என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# பிரதேச செயலக வேலைகள் பூர்த்தி

(தென்மராட்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்கான இருமாடிக் கட்டடத்தின் வேலைகள் யாவும் 17 மில்லியன் ரூபா செலவில் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் 2000ஆம் ஆண்டில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளின் போது முழுமையாகச் சேதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப் பிரதேச செயலகத்தின் திறப்புவிழா மிக விரைவில் இடம்பெற எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேசமயம் இப்பகுதிக்கான பிரதேச செயலகம் 2002ஆம் ஆண்டு முதல் இன்று வரை தனியார் வீடொன்றிலேயே இயங்கி வருவதாகக் கூறப்படுகின்றது. (க-16)

# பொதுக்கட்டமைப்புக்கு எதிராக கண்டியில் பிக்குமார் ஆர்ப்பாட்டம்

கண்டி ஜோர்ஜ் ஆர்.டி.சில்வா பு,ங்காவிற்கு அருகில் நேற்று முன தினம் பிக்குமார் ஆர்ப்பாட்டமொன றில் ஈடுபட்டனர்.

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் உடவத்தை நந்த தேரர் தலைமையில் இவ் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நேற்று முன்தினம் கண்டியில் ஆரம்பமாகிய இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் ஊடாக அரசாங்கம் பொதுக்கட்டமைப்பினை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கவிருப்பதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பிக்குமார் தெரிவித்தார்கள்.

உத்தேசிக்கப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்பினை நிறுவும் தீர்மானத்தைக் கைவிடுமாறு பிக்குமார் கோரிக்கை விடுத்துள்ளார்கள். (ற-4)

# நாட்டில் மதத்தின் பெயரால் அக்கிரமங்களே நிகழ்கின்றன

## ஈழவேந்தன் எம்.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு தொடர்பான ஜனதிபதியின் உறுதிமொழிகளில் சத்தியப்பாடு குறித்து சந்தேகம் ஏற்பட்டாலும் அவரது உறுதியும் திடசங்கற்பமும் மகிழ்ச்சி அளிக்கின்றது. என்று ஈழவேந்தன் எம்.பி. நேற்றுமுன்தினம் சபையில் தெரிவித்தார்.

இறப்புப் பதிவுகள் தொடர்பான தற்காலிக ஏற்பாடுகள் சட்ட மூலத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரச பயங்கரவாதத்தின்பல வடிவங்களை நாம் காண்கிறோம். புத்தபகவான் ஒரு சிறந்த பகுத்தறிவு வாதி. அவரைப் பின்பற்றி வாழ்வது தவறில்லை.

ஆனால், புத்த மதத்தைக் காப்பாற்றுகிறேன் என்று பௌத்த குருமார் அரசியலுக்கு வருவது ஒரு போதும் பயன் அளிக்காது.

இது சிங்கள இனத்தையே அழிக்கும் செயலாகும்.

பொதுக்கட்டமைப்பை உருவாக்க அனைவரும் முன்வரவேண்டும் பொதுக்கட்டமைப்பு அமுல்படுத்தப் படாவிட்டால் நாடு அல்லோல கல்லோலப்படும் என்று தமிழ்ச் செல்வன் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதியும் பொதுக்கட்டமைப்பை அமைத்தே தீருவேன் என்கிறார். அவரின் உறுதிமொழிகளை எவ்வளவு தூரம் நம்புவது என்பது வேறு விடயம்.

ஆனால் அது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

இதேவேளை, உல்லையில் புத்தர் சிலை அமைப்பது குறித்து ஹக்கீம் பேசுகிறார். திருமலையில் புத்தர் சிலைகள் அமைப்பது குறித்து சம்பந்தன் எம்.பி.பேசுகிறார். மதத்தின் பெயரால் அக்கிரமங்கள் நிகழ்த்தப்படுகின்றன.

கண்டி மாநாட்டில் எதிர்ப்புத் தெரிவித்ததை பிக்கு சபையில் வந்து நியாயப்படுத்தி பேசுகிறார். இவையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்றார். (க)

# 'ஹெரோயின் பாலே வேண்டும்!' அடம்பிடிக்கிறது குழந்தை

(கொழும்பு)

தாய்ப்பால் ஊடாக ஹெரோயின் போதைப் பொருளை கைக்குழந்தையின் உடம்புக்குள் ஊட்டிய சம்பவம் தொடர்பில், பொலிஸாரால் நீதிமன்றுக்கு ஒப்படைக்கப்பட்ட கணவன், மனைவி மற்றும் பச்சைக்குழந்தையான அவர்களது கைக்குழந்தையை விளக்கமறியலில் வைக்கும்படி மாளிகா கந்த மஜிஸ்திரேட் நீதிமன்ற நீதிவான் பிரியந்த சில்வா கடந்த வியாழக்கிழமை உத்தரவு பிறப்பித்தார்.

தாய், ஹெரோயின் போதைப் பொருள் உட்கொள்ளாத சந்தர்ப்பங்களில் இக்கைக் குழந்தை தாய்ப்பாலை மறுப்பதாக தெரிவித்த பொலிஸாரின் காரணங்களை ஆராய்ந்ததன் பின்னரே நீதிமன்றம் மேற்படி விளக்க மறியல் உத்தரவைப் பிறப்பித்தது.

பதினொருமாத இக் குழந்தையின் உடம்புக்குள் தாய்ப்பால் மூலம் ஹெரோயின் உட்சென்றிருப்பதை ஆராயும் பொருட்டு நீதிமன்ற வைத்திய அதிகாரி மூலமான மருத்துவ பரிசோதனைக்கு உத்தரவிட்ட நீதிவான் குறித்த மருத்துவ அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்கும் படியும் பணிப்புரை விடுத்தார்.

கொழும்பு, கிருலப்பனை, பாமன்கடைப் பிரதேசத்தைச் சேர்ந்த இந்திக்க பெரேரா, நதீகா தமயந்தி ஆகிய தம்பதியினரே மேற்படி விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களாவர்.

இத் தம்பதிகள் இருவரும் நெடுங்காலம் ஹெரோயின் போதைப் பொருளுக்கு அடிமையாகியிருப்பது குறித்து பொதுமக்கள் பலர் பல தடவைகள் முறைப்பாடு செய்திருப்பதாகவும் பொலிஸார் நீதிமன்றுக்கு தெரிவித்தனர்.

இவை தவிர இருவார காலத்துக்கு முன்னர் பொலிஸார் மேற்படி தம்பதியினரைக் கைது செய்த போதும் அவர்கள் ஹெரோயின் போதைப்பொருள் உட்கொண்டு மயக்கத்தில் இருந்ததாகவும் முறைப்பாட்டு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-2)

# நிரந்தர நியமனம் பெற்றுத் தருக!

## தொண்டராசிரியர்கள் அமைச்சர் டக்ளஸிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் தொண்டராசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனத்தைப் பெற்றுத்தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது விடயம் குறித்து ஈ.பி.டி.பி. வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

நேற்றுமுன்தினம் காலை 385 தொண்டராசிரியர்கள் யாழ்.மாவட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தலைமைப்பணிமனைக்குப் பேரணியாக வந்து அமைச்சருக்கான மனுவை அதன் பிரதம அமைப்பாளரும் யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய நடராஜா மதனராஜாவிடம் அமைச்சருக்கான மகஜரை கையளித்தனர்.

மகஜரைப் பெற்றுக் கொண்ட நடராஜா மதனராஜா தொண்டராசிரியர்களின் கோரிக்கைகளை உடனடியாகவே அமைச்சின் கவனத்திற்குக் கொண்டு வந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆவன செய்வதாக உறுதியளித்தார்.

இம்மகஜரை அங்கு திரண்டிருந்த தொண்ட ராசிரியர்களின் சார்பில் அதன் தலைவர் மற்றும் செயலாளர் சிவசிறி சாந்திநாயகம் ஆகியோர் கையளித்தனர். அங்கு உரையாற்றிய நடராஜா மதனராஜா, நியாயமான கோரிக்கைகளை எவர் விடுக்கும் பட்சத்திலும் அதனை நாம் ஏற்றுக்கொண்டு அதற்கு முழு ஆதரவு வழங்குவோம் எனத் தெரிவித்ததுடன், சமுகமளித்திருக்கும் தொண்டராசிரியர்கள் பிழையான வழியில் சென்று வன்முறைக்குப் பலியாகாமல் அறிவு பூர்வமாகச் சிந்தித்து வளமான எதிர்காலம் குறித்து அக்கறைகொண்ட விடயத்தை தாம் பெரிதும் வரவேற்பதாகவும் கூறினார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.(ற)

# மலையகப் பிரதேசங்களில் மண்சரிவு ஏற்படும் அபாயம்

(கொழும்பு)

பண்டாரவளை, கொஸ்லாந்த, மீரியபெத்த பகுதிகளில் பாரிய மண் சரிவுகள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுவதால் அப்பகுதியில் வாழ்கின்ற பிரதேச மக்கள் கூடிய அவதானத்துடன் இருக்குமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிலைய அதிகாரி ஆர்.எம்.எஸ். பண்டார தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், குறிப்பிட்ட மூன்று பகுதிகளிலும் மண்சரிவு ஏற்படுமாயின் அவ்விடத்திலுள்ள மூன்று லயன் குடியிருப்புத் தொகுதிகள் முற்றாக மண்ணுக்குள் அமிழும் அபாயம் ஏற்படும்.

இந்த மண்சரிவு மாகாந்தப் பகுதியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக இடம்பெற்று வருகின்றது.

மண்சரிவு ஏற்பட்டுள்ள மலையில் செங்குத்தான வெடிப்புகள் ஏற்பட்டதுடன் படைபடையாக பாறைகள் காணப்படுவதனால் கட்டாயம் இவ்விடத்தில் பாரிய மண்சரிவுகள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

இவ்விடத்தில் மண்சரிவுகள் ஏற்படும் என்று ஏற்கனவே இனங்காணப்பட்டிருப்பதால் இப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் கூடிய அவதானத்துடன் இருக்க வேண்டும்.

அது மட்டுமல்லாது தென்மேற்கு பருவ பெயர்ச்சிக் காற்று ஏற்படும் காலகட்டத்திலும் அடை மழை பெய்யும் கால கட்டத்திலும் அப்பிரதேச மக்கள் மிக அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (க-5)

# இராசி பலன்

19.05.2005
(வைகாசி 5, வியாழக்கிழமை)
ஏகாதசி பின்னிரவு 5.00 மணிவரை
உத்தரம் பிற்பகல் 3.29 மணிவரை
இராகுகாலம் 1.22- 2.52 மணிவரை
சுபநேரம் 7.22 - 8.52 மணிவரை
ஏகாதசி விரதம்

| | |
|---|---|
| மேடம் | செய்தொழில் நன்மை, காரிய அனுகூலம், தேகநலன், சுபநிகழ்வு. |
| இடபம் | வியாபார நன்மை, அஜீரண ரோகம், மனக்கவலை, காரிய இடையுறு. |
| மிதுனம் | தன்னம்பிக்கைக் குறைவு, தனவிரயம், ரோகநிலை, சிந்தனை மிகுதி. |
| கடகம் | மனோதைரியம், மாதர்நட்பு, தேக நலன், கூட்டு முயற்சி. |
| சிங்கம் | அதிக செலவு, மனோதைரியம், போசன சுகக் குறைவு, வாக்கு மேன்மை. |
| கன்னி | வெகுமானம், சயன சுகம், விருத்துபசாரம், முயற்சி கைகூடும். |
| துலாம் | சோம்பல் நிலை, அமைதிக் குறைவு, பிறருக்கு உதவுதல், சுபசெலவு. |
| விருச்சிகம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், சுபநிகழ்வு, போசன சுகம், நல்ல வருமானம். |
| தனுசு | நன்கொடை, அரோக்கியம், பெரியோரால் மதிக்கப்படுதல், இஷ்ட சித்தி. |
| மகரம் | பிரயாணம், எதிர்பாராத செலவு, புதிய முயற்சி, வீண் பயம். |
| கும்பம் | முழங்கால் வலி, மனக்கவலை, முயற்சி தாமதம், பிறருக்கு உதவுதல். |
| மீனம் | மாதர் நட்பு, காரிய நன்மை, பெருமையடைதல், சயன சுகம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

-வளவன்

# மரம் முறிந்து விழுந்ததில் வயோதிபர் மரணம்

(இணுவில்)

வேப்பமரம் ஒன்றைத் தறித்த போது அது எதிர்பாராத விதமாக முறிந்து விழுந்ததால் அருகிலிருந்த வயோதிபர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏழாலை வடக்கில் இடம்பெற்றுள்ளது.

அவ்விடத்தைச் சேர்ந்த 72 வயதான சின்னத்தம்பி என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

மரம் தறித்துக் கொண்டிருந்த போது அருகில் வேலையில் ஈடுபட்டிருந்த இவ்வயோதிபரின் தலையில் மரம் முறிந்து விழுந்ததால் அவர் படுகாயமடைந்தார்.

உடனடியாகத் தெல்லிப்பழை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட அவர், பின் மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் யாழ்.வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட சமயம் வழியிலேயே மரணமடைந்தார். (க-7-122)

# போதனாசிரியர்கள் கொரியா செல்வர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பக்கல்லூரியில் கல்விகற்பிக்கும் பத்து போதனாசிரியர்கள் பயிற்சிக்காக கொரிய நாட்டுக்கு செல்லவுள்ளனர்.

இரண்டு மாதம் இவர்களுக்கு பொறி முறை இயந்திரவியல், மின்சார இயந்திரவியல், தன்னியக்க இயந்திரங்களின் இயந்திரவியல், பொறியியல்துறை அலுவலக தன்னியக்க வலைப்பின்னல் ஆகியவை தொடர்பான பயிற்சிகளை வழங்குவதற்கு கொரிய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் இவர்கள் விரைவில் கொரிய நாட்டுக்கு செல்லவுள்ளதாகவும் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் என்.யோகராஜன் தெரிவித்துள்ளார். (க-19)

# ஐ.நா. வாகனத்தை சோதனையிட முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபைக்கு சொந்தமான வாகனமொன்றை சோதனையிட முனைந்ததாக ஐக்கிய நாடுகள் சபை குற்றஞ்சாட்டியுள்ளது.

கட்டைப் பறிச்சான் பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் வாகனங்களை இராணுவத்தினர் சோதனையிட முனைந்துள்ளனர்.

இவ்வாகனங்களை இராணுவத்தினர் சோதனையிட முடியாதென வாகனத்தில் சென்ற அதிகாரி தெரிவித்ததை அடுத்து இருதரப்பினரிடையே முறுகல் நிலை ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

இராணுவத்தினரின் இந்த நடவடிக்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் இராணுவத் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (க-7)

# வீதியில் பாரிய குழிகள்

(இணுவில்)

புத்தூர் நவக்கிரி அ.மி.த.க. பாடசாலைக்கு அண்மையில் உள்ள வீதியில் மூன்று பாரிய குழிகள் காணப்படுவதால் வீதியைப் பயன்படுத்தும் மக்களும், வாகனங்களும் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

சுமார் ஒரு வருட காலமாக இக்குழிகள் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சிப் பகுதியிலிருந்து கல், மண் ஏற்றிவரும் வாகனங்களும், பாரவூர்திகளும் அதிகமாகச் செல்லும் வீதியில் இவ்வாறு பாரிய குழிகள் காணப்படுவதால் மழை நேரத்தில் இவ் வீதியைப் பயன்படுத்துவோர் பலத்த சிரமங்களை எதிர்நோக்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-7-122)

# மஞ்சள் நிற மழை

தலவாக்கல வேருந் தோட்டத்தில் மஞ்சள் நிறத்திலான மழை பெய்துள்ளது. வேருந் தோட்டத்தின் இரண்டாம் இலக்க மலையிலேயே இந்த மழை பெய்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அக்கரைப்பத்தனைப் பகுதியில் இவ்வாறான மழை பெய்தமை குறிப்பிடத்தக்கது. (க-9)

# விவாத அரங்கு - 8

விடயம்

நம்மவர்கள் வெளிநாடு சென்றதனால் எமது கலாசாரம்:

✧ சீரழிந்துள்ளது.

✧ சீர்பெற்றுள்ளது.

நடுவர்: சிரேஷ்ட சட்டத்தரணி திரு.சி.சிவநேசன்

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி :
விவாத அரங்கு, வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# இன்று ஒரு தகவல்

## மேலாளர்

ஒரு பெரிய நிறுவனத்தில் ஜெனரல்மனேஜர் பதவியிலிருந்து விலகுகிறார். அவருக்கு அடுத்ததாக இருந்த ஒருவர் பதவி உயர்வு பெற்று அந்த இடத்திற்குவருகிறார். ஏற்கனவே இருந்தவர் மிகவும் திறமையான மனேஜர் என்று பெயர்வாங்கியவர் எல்லோரிடமும் மதிப்பிருந்தது அவருக்கு அதனால் புதிதாதக வந்தவர் அவரிடம் யோசனை கோட்டார். "ஊழியர்களிடம் நல்ல பெயர் வாங்குவது எப்படி?" என்று இதற்கு அவர் சொன்னார். "ஒரு திறமையான மேலதிகாரிக்கு இருக்கவேண்டியது இரண்டு ஒன்று நேர்மை இன்னுமொன்று சாமர்த்தியம் என்றார்.

"நேர்மை என்றால் என்ன? "என்று கேட்டார். இவர் "கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவது தான் நேர்மை என்ன கஷ்டம் வந்தாலும் எப்பாடு பட்டாவது வாக்குறுதியைக் காப்பற்றிவிட வேண்டும் அது தான் நேர்மை என்றார் அவர் "சரி சாமர்த்தியம் என்பது என்ன?" என்று கேட்டார். "அப்படிப் பட்டவாக்குறுதி எதையும் கொடுக்காமல் இருப்பதுதான் சாமர்த்தியம் என்றார். ஆக நிர்வாகித்தல் என்பது சாதாரண விடயமல்ல.

ஒரு மேலதிகாரி எப்படி இருக்கவேண்டும்? ஊிழியர்களிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும்? என்பதைப் பற்றியெல்லாம் தெரிந்து வைத்துக்கொள்வது நல்லது இது சம்பந்தமாக அமெரிக்காவில் 500 அதிகாரிகளிடம் ஆய்வு நடத்தி அதிலிருந்து ஐந்து விடயம் மிகவும் முக்கியம் என்று கண்டுபிடித்திருகின்றனர்.

ஒரு காரியம் நல்லபடிவெற்றி கரமாக நடந்து முடிந்தால் அந்த வெற்றிக்கு வேலை செய்யும் எல்லாப்பணியாளர்களும் காரணம் அவர்களுக்கும் அதில் பங்குள்ளது என்றால் அதை மனதார ஒப்புக் கொண்டு பாராட்டுங்கள் அப்படிச் செய்யமால் இருப்பது நேர்மையில்லை ஏதோ எல்லாம் உங்களால் தான் நடந்து கொண்டிருக்கிறது என்பது போல் நடந்துகொள்ளாதீர்கள்.

இரண்டாவது எல்லோரிடமும் மிகவும் பரிவுடன் நடந்துகொள்ளுங்கள் அனாவசியமாக மேலதிகாரி என்ற தோரணை வேண்டாம் மற்றோரின் உணச்சிக்கும், ஆசைக்கும் மதிப்பளியுங்கள் அதில் உண்மையான அக்கறை காட்டுங்கள் "அடுத்த மாதம் என் பெண்ணுக்குத்திருமணம் வைத்திருக்கிறேன்" என்று ஒருவர் சொன்னால் " அப்படியா? சந்தோஷம் "என்று கூறி அவர் கேட்கும் விடுமுறையைக் கொடுங்கள் அந்த நேரம் கணக்கெடுப்பு வேலைகள் உள்ளது. கல்யாணத்தை வைத்திருக்கிறாயே என்று கூறி கடுப்பேற்றாதீர்கள்.

மூன்றாவது எந்த விடயத்திலும் இது இப்படித்தான் இருக்கும் என்று தீர்மானம் செய்யாதீர்கள் உங்களுக்கு எது பிடிக்குமோ அதுதான் உண்மையாக இருக்கவேண்டும் என்று அவசியமில்லை சில உண்மைகள் உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் சில பிரச்சினைகளுக்கு அது தான் சரியான தீர்வு என்றால் அதை நீங்கள் ஏற்கத்தான் வேண்டும்.

நான்காவது ஒரு வேலையை ஒருவரிடம் ஒப்படைக்கும் போது நீங்கள் தெளிவாக இருக்கவேண்டும் அப்போது தான் அவர் குழம்பாமல இருப்பார். உங்கள் பேச்சும் எழுத்தும் சுருக்கமாக இருக்க வேண்டும் வளவளவென்று இருக்கக்கூடாது. குறிப்பாக இன்னதைச் செய் என்று உத்தரவிடும்போது இது மிக முக்கியம் ஐந்தாவது உங்கள் அதிகாரத்திற்குட்பட்டு அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நலன்களைத்தாராளமாகச் செய்து கொடுங்கள் ஒரு தனிப்பட்டதொழில் நிறுவனமாக இருந்தால் அவர்களுக்குத் தாராளமாகக் கொடுங்கள் அவர்களுடைய உற்பத்தித்திறனால்த்தான் நீங்கள் மேலதிகாரியாக இருக்கிறீர்கள் அதை நினைவில் வைத்திருங்கள்.

இப்படியெல்லாம் நடந்து கொண்டால் நீங்கள் ஒரு நல்ல மேலதிகாரி அல்லது நிர்வாகி அனுபவத்திலிருந்து சேகரித்த விடயங்கள் இவை அதனால் இதை ஏதோ வெறும் உபதேசம் என்று நினைத்து அலட்சியப் படுத்தவேண்டாம்.

ஒரு விபரம் தெரியாத முதலாளி அவருக்குத் தகுந்த மாதிரி ஒரு வேலைக்காரன் அவா் அவனைக் கூப்பிட்டார். கடைக்குப் போய கத்தரிக்காயும், வெண்டைக்காயும், உருளைக்கிழங்கும் வாங்கி வா என்றார். சரி என்று போன இவன் நீண்டநேரம் கழித்து திரும்பிவந்தான். "ஏன் இவ்வளவு நேரம்?" என்றார். முதலாளி "மூன்று சாமான் வாங்கச் சொன்னீர்கள் அல்லவா? கத்தரிக்காய் வாங்க ஒரு முறை போனேன் வெண்டைக்காய்வாங்க ஒருமுறை போனேன் உருளைக்கிழங்கு வாங்க ஒரு முறை போனேன்" என்றான்.

"அடப்பாவி! உனக்கு சொந்தப் புத்தியே கிடையாதா? ஒரு முறையில் மூன்றும் வாங்கியிருந்தால் அலைச்சல் மிச்சமாய் இருக்குமே என்றார் "இனிஅப்படி நடந்து கொள்கிறேன்" என்றான் அவன்.

ஒரு நாள் இருவருக்கு நெஞ்சுவலி "உடனே இவனைக் கூப்பிடடு போய் உடனே டாகடரை அழைத்து வா என்றார். இவன் ஓடினான் மூன்றுபேருடன் திரும்பிவந்தான் டாக்டரை மட்டும் தானே அழைத்து வரச் சொன்னேன் மற்ற இருவரும் யார்?" என்றார். அதற்கு அவன் "அலைச்சல் மிச்சமாகட்டும் என்று அவர்களையும் அழைத்து வந்தேன் ஒருவர் வக்கீல் உயில் எழுத உபயோகப்படுவார் இன்னொருவர் ஈமச்சடங்கு செய்பவர் ஏதாவது ஆகிவிட்டால் உபயோகப்படுவார் என்று அவரையும் அழைத்துவந்தேன் என்றான்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# நல்லூர் பிரதேசசபைப் பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள்...

(சுதுமலை)

நல்லூர் பிரதேச சபையின் கீழ் உள்ள திருநெல்வேலி,கொக்குவில், கோண்டாவில், கல்வியங்காடு, அரியாலை ஆகிய பகுதிகளில் டெங்கு வாரத்தில் 12க்கும் அதிகமான டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக நல்லூர் பிரதேசசபை செயலாளர் பொ. வைரமுத்து அறிவித்துள்ளார்.

மேற்படி டெங்கு ஒழிப்பு செய்திட்டம் நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள் சிரேஷ்ட பொதுச் சுகாதாரப்பரிசோதக மேற்பார்வையின் கீழ் ஒவ்வோர் பகுதிகளிலும் பொதுமக்களின் ஒத்துழைப்புடனும் சனசமூக நிலையங்கள் மாதர் அமைப்புக்கள், கிராமிய அபிவிருத்திச்சங்கங்களின் ஒத்துழைப்புடன் இடம் பெறுகிறது.

மேற்படி செயற்திட்டத்தை பிரதேச சபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் வீதி சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் ஆகியோரை ஈடுபடுத்தி சிறந்த முறையில் சிரமதானங்கள் மற்றும் டெங்கு விழிப்புணர்வு கருத்தரங்குகள் ஆகியவற்றை நடாத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

★ திருநெல்வேலி சந்தைச் சூழல்துப்புரவு செயதல், கழிவுநீர் அகற்றல், நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை சுத்தம் செய்தல்.

★ திருநெல்வேலி, பாற்பண்ணைச் சுற்றாடல் நுளமபு பெருகும் இடங்கள் இனங்கண்டு கழிவுகள் சேரும் இடங்களை துப்புரவு செய்தல்.

★ தலங்காவில் பிள்ளையார் கோவில் சுற்றாடலில் உள்ள வெள்ளநீர் வழிந்தோடும் வாய்க்காலை துப்புரவு செய்து கழிவுநீ செல்லக் கூடிய வகையில் பாலத்திற்கு கீழுள்ள பற்றைகள் புல்பூண்டுகளை அகற்றுதல்.

★ திருநெல்வேலி நாவலடிவீதி,கலாசாலை வீதி, ஆகியவற்றை துப்புரவு செய்தல்.

★ கலவியங்காடு செங்குந்தா வீதியில் உள்ள கேணியடி மற்றும் அதன் சுற்றாடலில் நுளம்பு பெருகும் இடங்களை இனம் கண்டு துப்புரவு செய்தல்.

★ கொக்குவில் உப அலுவலக சுற்றாடல் புகையிரத பாதையில் கழிவுகளை அகற்றிப் புல் பூண்டு, பற்றைகளை வெட்டி துப்புரவுசெய்தல்.

★ கொக்குவில் குளங்கரை வீதியிலிருந்து கொக்குவில் சந்தி வரையிலுள்ள பாலங்களை துப்புரவு செயது வெள்ளநீா வழிந்தோட வழிவகை செயதல்.

★ கொக்குவில் மேற்கு கேணியடி ஆயுள் வேத வைத்திசாலையைச் துப்புரவு செய்தல்.

★ கோண்டாவில் மத்திய மருந்தக வீதி மற்றும் கழிவுகள் குவிந்துள்ள பாலம் ஆகியவற்றை துப்புரவு செய்தல்

★ அததுடன் பாடசாலைகள் தையல் பயிற்சி நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்கள் போன்ற நிலையங்களில் டெங்கு நோய் விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்துதல் போன்ற செயற்திட்டங்கள் முன்னெடுக்கபபடவுள்ளன. (ரு-7,252)

## கடமைநேரத்தில் தனியார் மருத்துவ மனையில் சேவை;

# 3 வைத்திய அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

கடமை நேரத்தில் தனிப்பட்ட மருத்துவ சேவையில் ஈடுபட்ட மூன்று வைத்திய அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட விருப்பதாக சுகாதாரப் பராமரிப்பு போஷாக்குத்துறை அமைசசர் நிமல்சிறிபாலா டிசில்வா தெரிவித்துள்ளார்.

அம்பலாங்கொடை,எல்பிட்டிய கொரிடக்க வெல ஆகிய மூன்று வைத்தியசாலைகளில் கடமை புரிந்துவரும் வைத்திய அதிகாரிகள் மூவரே கடமை நேரத்தில் தனிப்பட்ட மருத்துவ சேவையில் ஈடுபட்டிருந்த சமயம் அமைச்சின் திடீர் சோதனைக் குழுவிடம் கையும்மெய்யுமாக அகப்பட்டிருப்பதாகவும அவர் கூறினார்.

இம மூவருக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு பொது சேவைகள் ஆணைக் குழுவுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

இது தொடர்பாக பிரதேசவாசிகளிடமிருந்து கிடைக்கபெற்ற தகவல்களின் அடிப்படையில், தொடககவெல வைத்தியசாலை வைத்திய அதிகாரியும் எல்பிட்டிய வைத்திசாலை வைத்திய அதிகாரியும் தங்களது உத்தியோகபூர்வ வாசஸ தலத்தில் கடமை நேரத்தில் தனிப்பட்ட மருத்துவ சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததை அமைச்சின் திடீர் சோதனைக்குழு கண்டுபிடித்துள்ளது என்றும்.

இதே போல் அம்பாலங்கொடை வைத்தியசாலை பல் வைத்திய நிபுணரும் கடமை நேரத்தில் நகரில தனிப்பட்ட மருத்துவ சேவையில் ஈபட்டுக் கொண்டிருந்ததை அமைச்சின் திடீர் சோதனைக் குழு கண்டறிந்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.(க-5)

# ஆசிரியர் வகுப்பு-Iற்கு உள்ளீர்ப்பதற்கு பரீட்சை நடாத்தப்படுவதற்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழ் ஆசிரியர் சங்க நல்லூர் கிளைக் கூட்டம் தலைவர் கு. மகாலிங்கம் தலைமையில் அண்மையில் கூடி ஆசிரியர் வகுப்பு Iஇற்கு உள்ளீர்ப்பு செய்வதற்கு பரீட்சை நடத்துவது என்பதை வன்மையாகக் கண்டித்து தீர்மானம் நிறை வேற்றியுள்ளது.

மேலும் இது பற்றி வலயச் செயலாளர் மு.சுகுமார் கூறுகையில்,

ஆசிரியர் வகுப்புI உள்ளீர்ப்பு செய்தல் சம்பந்தமான அரசின் அண்மைய அறிவித்தல் வகுப்பு Iஇற்குரிய ஆசிரியர்கட்கு மட்டுமல்ல சகல ஆசிரியர்களுக்கும்,கல்விச் சமூகத்திற்கும் பெரிய அதிர்ச்சியாகும்.

இவ்விடயத்தை சற்று ஆழமாக சிந்திப்போமாயின் யாரோ செய்ததவறுக்கு எவரோ தண்டனை அனுபவிப்பது போன்தாகும் ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் படி வகுப்புI இற்கான பரீட்சை ஒரே ஒரு தடவை மட்டுமே நடாத்தப்பட்டது இப்பொழுது பததாண்டுகளின் பின் பரீட்சை பற்றிபேசப்படுவது வியப்புக்குரியது.

எமது சங்கத்துடன் பல தடவை மேற்கொண்ட பேச்சுக்களின் போது பல மட்டங்களில் அவர்களின் சேவையைக் கருத்தில் கொண்டு 20 புள்ளிகளைப் பெறறவர்களை வகுப்பு I,ற்கு ஈர்ப்புச் செய்வதற்கு இணக்கம் காணப்பட்டது.

எனவே எந்த விதமான நிபந்தனையும் இன்றி இன்று வரை 20 புள்ளிகளைப் பெற்ற ஆசிரியர்கள் வகுப்பு Iஇற்கு உள்ளீர்க்கப்படல் வேண்டும்.

இக் காலப்பகுதியில் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் பற்றியும் கவனத்தில் கொண்டு அவர்களையும் உள்ளீர்ப்புசெய்து கொள்ளல்வேண்டும்.

இவ்விடயத்தில் இரு கருத்துககு இடமில்லை மேற்படி பரீட்சை நடாத்தப் படாததற்கான பொறுப்பு ஆசிரியாகளுடையதல்ல இது அரசினுடையதே எனவே விட்டப்பட்ட தவறுக்கான பொறுப்பை ஏற்று முன்பு ஒரு தடவை உள்வாங்கிய அதே முறையைப் பின்பற்றி செயற்பட வேண்டிய கடமைப்பாட்டை அவர்கள் உணர்ந்து செயற்படுவார்கள் என எதிர்பார்க்கப் படுவதாகத்தெரிவித்தார். (ர)

# இலங்கை மின்சார சபைக்கு நிதியுதவி வழங்க முடியாது

## சர்வதேச நிதி நிறுவனங்கள் அறிவிப்பு

(கொழும்பு)

இலாபமீட்டாத இலங்கை மின்சார சபைக்கு நிதியுதவி அளிக்க முடியாது என சர்வதேச நிதி நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

இலங்கை மின்சாரசபை ஊழியர்களின் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஜப்பானிய அபிவிருத்தி ஒத்துழைப்பு வங்கி ஆகிவற்றின் பிரதிநிதிகளுக்கும் இடையில் கடந்த புதனன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இந்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபை மறுசீரமைக்கப்படாத பட்டசத்தில் அதற்கான அனைத்து நிதியுதவிகளையுமதாங்கள் நிறுத்தப்போவதாக இந்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் கூட்டாக அறிவித்துள்ளனர்.

தற்போதுள்ள நிலையில் மின்சார சபையானது இலாபமட்டும் ஒரு நிறுவனமாக செயல்ப்பட முடியாது. என்பதை சுட்டிக்காட்டிய அவர்கள் இவ்வாறான நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்க முடியாது எனறும் தெரிவித்தனர்.

இதேவேளை, மின்சாரசபை மறுசீரமைப்புத் தொடர்பான அமைச்சரவை அங்கீகாரம் மீளப் பெறபட்டுள்ளது ஜே.வி.பியின் அழுத்தங்களை அடுத்து இந்த அங்கீகாரம் ரத்துச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரு-4)

# தொழிலாளர்கள், தொழில்வழங்குநர்களின் பொறுப்புக்களும் கடமைகளும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் அனைத்து தொழில் ஸ்தாபனங்களிலும் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் தொழில் வழங்குநர் ஆகியோருக்குள்ள பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் குறித்து யாழ்.மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் கே.கனகேஷ்வரன் விடுத்துள்ள சுற்றறிக்கை வருமாறு,

## தொழிலாளர்கள்

* சேவை ஒப்பந்தத்திற்கு இணங்க நடந்து கொள்ளுதல் வேண்டும்.
* பொதுவான சட்டப் பிரமாணங்களுக்கு இணங்க நடந்து கொள்ளுதல் வேண்டும்.
* தினந்தோறும் தொழிலுக்குச் சமூகமளித்தல் வேண்டும்.
* குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே தொழிலுக்குச் சமூகமளித்தல் வேண்டும்.
* மிகவும் கவனத்துடன் கடமைகளில் ஈடுபடுதல் வேண்டும்.
* உற்சாகத்துடன் கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.
* தொழில் வழங்குநரின் அல்லது அவரின் பணிப்புகளுக்கமைய நடந்து கொள்ளுதல் வேண்டும்.
* தொழில் வழங்குநரின் சொத்துக்களைத் திருடக்கூடாது.
* தொழில் வழங்குநருக்கு நேர்மையான விதத்தில் சேவை செய்தல் வேண்டும்.
* சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் வேளையில் சேவை நிலையத்தினுள் மதுபோதையில் இருத்தல் கூடாது.
* அறிந்து கொண்டு வேண்டுமென்றே ஒழுங்கு தவறி நடத்தல் கூடாது.
* நுகர்வோருடன் அல்லது வாடிக்கையாளருடன் ஒழுங்கீனமாக நடந்து கொள்ளக் கூடாது.
* தாபனத்திற்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் கருத்துக்களை வெளியிடுதலோ அல்லது நடந்துகொள்ளுதலோ கூடாது.
* தொழில் தருநருக்கு வஞ்சனை எண்ணத்துடன் விபரங்களைச் சமர்ப்பிக்காது விடுதல் கூடாது.
* தொழில் வழங்குநரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாது தாபனத்தினுள் பிரசுரங்களை வெளியிடுதல் கூடாது.
* வேலைத்தலத்தின் சுத்தத்தினைப் பேணுவதற்குத் தவறக்கூடாது.
* தாபனத்தின் அமைதியைப் பேணுவதற்கு ஒத்துழைக்க வேண்டும்.
* புகைத்தல் தடை செய்யப்பட்டிருப்பின் அவ்விடத்தில் அதற்குகந்த விதமாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.
* தாபனத்தின் உற்பத்திக்கு அல்லது சேவைக்கு ஊறு விளைவிக்கும் வண்ணம் அல்லது குறைவடையும் வண்ணம் நடந்து கொள்ளுதலோ அல்லது அத்தகைய செயலகளுக்கு துணை போதலோ கூடாது.
* தொழில் வழங்குநரால் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு உபகரணங்களை தொழிலாளர்கள் எல்லோரும் பயன்படுத்துதல் வேண்டும்.
* சட்டத்திற்கு முரணான விதத்தில் வேலை நிறுத்தங்களை ஒழுங்கு செய்தலோ உற்சாக மூட்டுதலோ அல்லது நடத்துதலோ கூடாது.
* தொழில் நியாய சபைகளின் தீர்ப்புக்கள் கைத்தொழில் நீதிமன்றுகளின் தீர்ப்புக்கள் என்பவற்றை மாற்றுமாறு கோரி நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது.
* விசுவாசமாகவும் திறமையாகவும் சேவைகளை வழங்குதல் வேண்டும்.

## தொழில் வழங்குநர்

* ஊழியருக்கு நியமனக் கடிதத்தை வழங்குதல் வேண்டும் (கடை, அலுவலக ஊழியர் சட்டத்திற்கிணங்க)
* சம்பளப் பதிவேடு பேணப்படுதல் வேண்டும்.
* வரவுப் பதிவேட்டினைப் பேணுதல் வேண்டும்.
* சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வாரவிடுமுறைகள், ஆண்டு விடுமுறைகள், பொது விடுமுறைகள், போயா விடுமுறைகள் வழங்கப்படுதல் வேண்டும்.
* குறித்த சம்பளத்துக்குக் குறையாத அளவு சம்பளத்தை வழங்குதல் வேண்டும்.
* குறிப்பிட்ட காலம் கடப்பதற்கு முன்னர் சம்பளம் வழங்கப்படுதல் வேண்டும்.
* ஊழியர் சேமலாப, ஊழியர் நம்பிக்கை நிதிக்கான உதவு தொகையினைச் செலுத்துதல் வேண்டும்.
* பணிக்கொடைகள் கொடுப்பனவுச் சட்டத்திற்கு இணங்க பணிக்கொடைகளை வழங்குதல் வேண்டும்.
* பிரசவ நலன்கள் சட்டத்திற்கு அமைய "டீ" அறிக்கையினைப் பேணுதல் வேண்டும்.
* பிரசவ விடுமுறை பெற்றுக்கொண்ட காலத்தின் பொருட்டு விடுமுறை பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.
* கர்ப்பமுற்றுள்ள பெண்களின் சுகாதாரத திற்கும். கருவுக்கும் தீங்கேற்படாதவாறு அவர்களைச் சேவையில் ஈடுபடுத்துதல் வேண்டும்.
* சட்டத்திற்கிணங்க பிரசவ நலன்களை வழங்குதல் வேண்டும்.
* பிரசவத்தின் பின்னர் பாலூட்டுவதற்காக நாளொன்றுக்கு இரு தடவைகள் விடுமுறை வழங்குதல் வேண்டும்.
* பிரசவத்தின் பொருட்டு பெற்றுக் கொள்ளப்படும் விடுமுறையை நீக்கி பெண் தொழிலாளிக்குரிய ஏனைய விடுமுறைகளில் பாதிப்பினை உண்டுபண்ணுதல் கூடாது.
* 14 வயதுக்குக் குறைந்த எவரையும் சேவைக்கு அமர்த்துதல் கூடாது.
* தொழில் ஆணையாளர் அல்லது அவருடைய பிரதிநிதி தாபனத்தைப் பரீட்சிப் பதற்காக சமூகமளிக்குமிடத்து அவருக்கு இடையூறு செய்யக்கூடாது.
* தொழில் ஆணையாளர் தாபனத்தைப் பரீட்சிப்பதற்காக சமூகமளித்த புத்தகங்களையும் அறிக்கைகளையும் சமர்ப்பிக்குமாறு கேட்குமிடத்து அவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
* ஊழியர் சேமலாப நிதிக்கும் ஊழியர் நம்பிக்கைப பொறுப்பு நிதியத்திற்கும் உதவு தொகை செலுத்தப்பட்டமை தொடர்பான குறிப்பிட்ட அறிக்கைகளை மாதம் தோறும் குறிப்பிட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
* யாதேனும் தொழில் ரீதியான விபத்து ஏற்படுமிடத்து அதுபற்றி உடனே தொழில் ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும்.
* யாரேனும் ஊழியர் ஒருவர் தொழிற் திணைக்கள அலுவலர் ஒருவருக்கு விபரங்களை தெரிவித்தார் என்ற காரணத்துக்காக அவருக்குத் தண்டனை எதுவும் வழங்கக் கூடாது.
* ஊழியர்களில் 40 வீதத்துக்கு மேல் அங்கத்துவம் வகிக்கும் தொழிற்சங்கம் ஒன்றை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.
* ஊழியர் ஒருவா சமபளச்சபையொன்றில் அங்கத்தவராக இருத்தல் அல்லது அதில் பங்குபற்றுதல் காரணமாக அவருக்கெதிராக நடவடிக்கையெதுவும் எடுத்தல் கூடாது.
* ஊழியர் ஒருவருக்கு அல்லது ஊழியர்களுக்கு நன்மை பயக்கும் வண்ணம் தொழில் நியாய சபைகளினால் வழங்கப்படும் தீர்ப்புக்களை கைத்தொழில் நீதிமன்றின் தீர்ப்புக்களை மாற்றுமாறு கோரி அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது. (ற)

## கடற்றொழிலாளர் சங்கம் எம்.பியிடம் கோரிக்கை

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பாஷையூர் மீன் சந்தையைப் புனரமைத்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுமாறு பாஷையூர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தற்போது பாதுகாப்பு வலயத்தினுள் மட்டுப்படுத்தப்பட்ட பாவனையில் உள்ள இந்த மீன்சந்தையை எவ்வித கட்டுப்பாடுமின்றி பயன்படுத்தவும் நவீன வசதிகள் மிக்க மீன்சந்தையாகப் புனரமைத்துத் தருமாறும் மேற்படி சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(க-7,49)

## வாகன விபத்தில் 8 பொலிஸார் படுகாயம்

(ஜா-எல)

ஜாஎல நகரில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் 8 பொலிஸார் படுகாயமடைந்துள்ளனர். கொள்ளுப்பிட்டிப் பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த பொலிஸ் அதிகாரிகளே இவ்வாறு படுகாயமடைந்தவர்களாவார்.

கட்டுப்பெத்தைப் பகுதியில் மரண வீடொன்றிற்குச் சென்றுவிட்டு திரும்பும் வழியிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இவர்களில் நால்வரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக ஜா-எல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(க-7)

# கடல் நீரில் எரியும் ஆலய விளக்குகள்

(முல்லைத்தீவு)

முளளியவளை காட்டா விநாயகர் ஆலய வருடாந்தப் பொங்கல் எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கு முன்னோடியாகக் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற தீர்த்தோற்சவத்தின்போது பக்த கோடிகள் புடைசூழ சிலாவததை கடற்கரைக்கு எழுந்தருளிய காட்டா விநாயகர் தீர்த்தோற்சவம் முடிந்து திரும்பும்போது எடுத்துவரப்பட்ட கடல்நீர் இம்மாதம் 22ஆம் திகதி நடைபெறவுள்ள வற்றாப்பழை கண்ணகை அம்மன் பொங்கல் தினம்வரை காட்டா விநாயகர் ஆலயத்தில் விளக்கெரிக்க உபயோகிக்கப்பட்டு, மிகுதியாக உள்ள நீர் 23ஆம் திகதி வற்றாப்பழை அம்மன் கோயிலுக்கு எடுத்துச்செல்லப்பட்டு விளக்கெரிக்கப் பயன்தப்படும். (து-128)

# 24மணி நேரமும் இயங்கும் மூளாய் வைத்தியசாலை

(பொன்னாலை)

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை 24 மணி நேரமும் சேவையை வழங்கி வருவதாக அதன் இயக்குநர்சபை தெரிவித்துள்ளது.

கடந்த கால யுத்தத்தினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டு இயங்காமல் இருந்த மேற்படி கூட்டுறவு வைத்தியசாலை அண்மையில் புனர்நிர்மானம் செய்யப்பட்டது.

ஆரம்பத்தில் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை வழங்கிவந்த இவ் வைத்தியசாலை தற்போது 24மணி நேரமும் சேவையை வழங்குகிறது.

இங்கு வெளிநோயாளர் பகுதி, உள்ளக நோயாளர் பகுதி, மகப்பேற்றுப் பகுதி என்பன 24 மணி நேரமும் இயங்கி வருகின்றன.

கண்வைத்திய சேவை ஞாயிறு, புதன், வெள்ளி ஆகிய தினங்களில் பிற்பகல் 4.30 மணிக்கும், இருதய வைத்திய நிபுணர்சேவை வியாழக்கிழமைகளில் மாலை 4.30 மணிக்கும், பற்சிகிச்சை சனிக்கிழமைகளில் மாலை 5 மணிக்கும் இடம்பெறுகின்றன.

அத்துடன் மகப்பேற்று வைத்திய நிபுணர் சேவை புதன்கிழமைகளில் மாலை 4.30 மணிக்கும் இடம்பெறுகிறது.

மக்களின் வைத்திய சேவைக்கென மக்களால் நிர்மாணிக்கப்பட்ட இவ் வைத்தியசாலை குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவைகளை வழங்கி வருவதாக கூட்டுறவு வைத்தியசாலையின் இயக்குநர் சபை தெரிவிக்கின்றனர். (க-7,49)

# இந்தியாவில் அனல்காற்று, வெயில்! 60 பேர் இதுவரை உயிரிழப்பு !!

(புதுடெல்லி)

இந்தியாவின் வட மாநிலங்களில் 112 டிகிரியில் சுட்டெரிக்கும் வெயிலின் கொடுமைக்கு இதுவரை 60 பேர் பலியானார்கள்.

வடமாநிலங்களில் கோடைவெயில் கொளுத்துகிறது. ஒரிசாவில் அதிகபட்சமாக 112.4 டிகிரி வெயில் அடிக்கிறது. மற்ற மாநிலங்களில் 105 டிகிரியை வெயில் தாண்டிவிட்டது.

ஆந்திராவில் வெயில் கொடுமை தாங்காமல் பறவைகள் செத்து விழுகின்றன. அங்கு வெயிலுக்கு இதுவரை 19பேர் சுருண்டு விழுந்து பலியாகி உள்ளனர். ஒரிசாவில் 12பேரும், மேற்கு வங்காளத்தில் 5பேரும், ஜார்க்கண்ட் மாநிலத்தில் 4 பேரும் வெயில் கொடுமை தாங்காமல் உயிரிழந்துள்ளனர்.

ஓரிசாவில் கடந்த 2 நாட்களில் 81பேர் பலியானார்கள். அவர்களில் 10பேர் வெயிலுக்கு பலியானதாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதி அளித்தனர்.

இன்னும் 20பேர் மரணம்பற்றி சந்தேகம் நிலவுகிறது. அதுபற்றி விசாரணை நடக்கிறது. வெயிலின் உக்கிரம்வரும் நாட்களில் இன்னும் அதிகரிக்கும். அப்போது சாவு எண்ணிக்கை அதிகரிக்கும் என்று தெரிகிறது. (ற)

# பிள்ளையைப் பணயம் வைத்து புடவை வாங்கிய தந்தை

(துன்னாலை)

தனது பிள்ளையை புடவைக்கடைக்கு கூட்டிச்சென்று கடையில் கொடுத்துவிட்டு புடவைகள் வாங்கிய சம்பவமொன்று கடந்த திங்களன்று நெல்லியடிப் பகுதியில் இடம் பெற்றது.

இச்சமபவம் பற்றித் தெரியவருவதாவது, குறித்த நபர் தனது 9வயது பெண் பிள்ளையை நெல்லியடி கொடிகாமம் வீதியில் உள்ள புடவைக்கடை ஒன்றில் 2 ஆயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட உடுப்புக்களை வாங்கிவிட்டு குழந்தையை பணமாக (பணயமாக) கொடுத்துவிட்டுச் சென்றுள்ளார்.

இத் தந்தையின் செயற்பாட்டால் செய்வதறியாது திகைத்த கடை உரிமையாளர் அன்றுமாலை 7.00மணிவரை குறித்த பிள்ளையை மீட்க எவரும் வராத காரணத்தால் தமது வீட்டுக்கு கூட்டிச் செல்ல வேண்டி நேரிட்டது.

பின்னர் நேற்று முன்தினம் காலை வடமராட்சி அரசியல்துறையில் பிள்ளையை கடை உரிமையாளர் ஒப்படைத்ததுடன் குறித்த பிள்ளை மூலம் குறித்த பெற்றோர்களின் விபரம் பெறப்பட்டது.

தற்போது தந்தை தலைமறைவாகியுள்ளார். தயார் அரசியல்துறையினருடன் தொடர்புகொண்டு பிள்ளையைப் பொறுப்பேற்க முற்பட்ட வேளை குறித்த பிள்ளை மறுத்துவிட்டது.

இதேவேளை சம்பவம்பற்றி தாயாரிடம் வினவிய போது, தமது கோவிலில் திருவிழா நடை பெறுவதாகவும் திருவிழாவுக்கு அணிய புதிய புடவைகள் அனைவருக்கும் வாங்கி வருவதாகக் கூறிச்சென்ற தனது கணவர் பெண்பிள்ளையை புடவைக் கடையில் விட்டு விட்டார் எனவும், முன்னரும் அவ்வாறு பலதடவை செய்துள்ளார் எனவும் கூறினார். (ற-101)

# யுத்த நிறுத்தம் அமுலில் இருப்பதற்கு க.கா.குழுவின் சேவை அளப்பரியது

(கண்டி)

அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் பொதுக்கட்டமைப்பு தொடர்பிலான இறுதியான விடயங்களில் இணக்கப்பாடு கண்டுள்ளதாக அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித் தார்.

கண்டியில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் இரண்டாம் நாள் அமர்வின் போது, பிரதிநிதிகளுக்கு சமாதான முயற்சிகளின் முன்னெடுப்புக்கள் பற்றியும் விடுதலைப்புலிகளுடன் இணைந்து சுனாமி நிவாரண மற்றும் புனர்நிர்மானப் பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக்கட்டமைப் பொன்று ஏற்படுத்துவதில் அரசின் நிலைப்பாடு பற்றியும் இவர் விளக்கமளித்தார்.

அதன்போதே அவர் இதனைத்தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் குறிப்பிடுகையில், யுத்த நிறுத்த உடன்பாடு உரிய முறையில் முன்கொண்டு செலலப்படுவதற்கு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரின் சேவை அளப்பரியது.

மூன்று வருடகாலமாக யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்தி வைப்பதற்கு அரசும் விடுதலைப்புலிகளும் மட்டுமல்ல யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும் பல தியாகங்களை செய்திருக்கின்றனர். அதற்கு தாம் நன்றியையும் பாராட்டினையும் தெரிவிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரை

**8.5.2005 ஆம் திகதி யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியின் ஐந்தாம் ஆண்டு நிறைவு நிகழ்வின் போது பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரையில் ''சுந்தரனாரின் மனோன்மணியம்- காலமும் கருத்தும்'' என்ற தலைப்பில், பேராயர் கலாநிதி ஜெயபநேசன் நிகழ்த்திய பேருரையின் தொகுப்பு:**

'காற்றில் ஏறி விண்ணையும் சாடுவோம் காதற் பெண்கள் கடைக்கண் பணிப்பிலை' என்று. நடராசரை சுந்தர முனிவர் பாராட்டுகிறாா, 'உன்னுடைய முயற்சியினாலேதான் இந்தப் பாண்டிய நாட்டிலே இந்த இரகசியப் பாதையை என்னால் அமைத்துக் கொள்ள முடிந்தது'.

அப்பொழுது அவர் சொல்லுகிறார், 'என்னுடைய திறமையல்ல. வாணியினுடைய கடைக்கண் பார்வையினாலேதான் இதைச் செய்து முடித்தேன்'.

'பின்னிய கூந்தற் பேதையின் இளமுகம் என்னுளத்திருந்தும் ஏற்றுவது பிறந்த தெலுங்கு முதலிய பாஷைகளுக்கும் சமமோ தாழ்வோ என அறியாதார் பலரும் ஐயுறும்படி அன்றிருந்தது. தமிழ் நாட் டிலே தமிழ்த்தாய் வணக்கமென்றால் பேராசிரியருடைய 'நீராடு கடலுடுத்த நில மடந்தை...' பாடல்தான் பாடப்படுகிறது.

முதன்முதலாக பேராசிரியர் சுந்தரம் பிளளை தமது மெய்யியற் கருத்துக்களைக் கூறுமுகமாக ஜவகனை ஜீவாத்மாவாகவும் அவனை வசப்படுத்தி ஆட்டுவித்த குடிலனை மாயா சக்தியாகவும் மனோன்மணியை ஜவாத்மாவின் பரிபக்குவ காலத்தைக் குறிக்கும் முத்திக்குரிய உததம பாகமான நிகழ்த்துமே; இந்தப் பாண்டியர் உரிமை பாராட்டும் பண்பினா. செந்தணல புகுவது அவா தம்செருக்கு; சுதந்திரம் அவர்க்குயிர்; சுவாசம் மற்றொன்று. அந்தணா் வளர்க்கும் செந்தணல அதனி



# சுந்தரனாரின் மனோன்மணியம் காலமும் கருத்தும்

(தொடர்ச்சி....)

பாரதி கண்ட புதுமைப் பெண்ணை வாணியிலே பார்க்கிறோம். பெற்றோர் எவ்வளவுதான் நிர்ப்பந்தம் செய்தாலும், மன்னரே வந்து கேட்டாலும் இது முடியாது. நான் இதற்குச் சம்மதிக்கமாட்டேன் என்று சொல்லுகின்ற அந்த வீர உரைகளைப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை எழுதுவதைப் பார்த்து நடராசர் என்பவர் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை என்றே சொல்லுவார்கள். தன்னுடைய சிந்தனைகளையெல்லாம் நடராசர் மூலமாக ஊட்டிவிட்டிருக்கிறார். அப்போது அவரைப்பற்றி சகடர் சொல்லுவார், 'சித்தமே சித்தம், சொல்லுக்கு அடங்கா தனியே உரைப்பான் தனியே சிரிப்பான்'.

பெண்ணின் பெருமையை நடராசர் சொல்லுகிறார், 'ஆண்கள் மனமும் அதற்கொரு வாணியும் அனறோ சீ...சீ... என்னை தீய இச்செய்கை' என்று பலதேவருடைய செயலைக் காட்டுகிறார். இயற்கையைப் பற்றிப் பாடுகிறார்.

'எம்மண்ணாயின நன்மண் ஆக்குவை எடுத்தனை இதற்கோ எடுத்தனை யாக்கை' பாரதி பாடினார் காதலின் பெருமையை, இப்பணி. அதனா லன்றோ அதுபோல விரைவில் இவ்வினை எளிதில் முடிந்தது'.

வையாபுரிப் பிள்ளை எழுதுகிறார், 'கண்ணகியை வணங்குவித்த இளங்கோவடிகளைப் போல தமிழ்மொழியைத் தெய்வமாக்கி அழகு சேர் அத்தெய்வத்துக்கு வணக்கத்தை முதன்மையாகத் தொடங்கிவைத்தவா் இப் பேராசிரியரே ஆவார் என்று. மகாகவி பாரதியார், 'யாமறிந்த மொழிகளிலே....' என்ற பாடலிலே தமிழின இனிமையைப் பற்றி, சிறப்புக்களைப் பற்றி கூறிய கருதததுக்களை எல்லாம் சுந்தரமபிள்ளை இந்நூலின் முகவுரையிலே எழுதியிருக்கின்றார். பழைமையிலும், இலக்கண நுண்மையிலும், இலக்கிய விரிவிலும் சிறப்புக்களிலும் மற்றைய கண்டங்களிலுள்ள எப் பாஷைக்கும் தமிழ்மொழி சிறிதும் தலைகவிழக்கும் தன்மையின்று. இவ்வண்ணம் எவ்விதத் திலும் பெருமை சான்ற இத் தமிழ்மொழி பற்பல காரணச்செறிவால் சிற்சில காலமாக நனகு பாராட்டிப் பயில்வார் தொகை சுருங்கி மாசடைந்து நிலை தளர்ந்தது. நேற்றுப் சுத்த தத்துவமாகவும் இமமுறையைப் பாவிதது உய்த்துணர்ந்து கொள்ளவேண்டுமென்று முகவுரையிலே எழுதியிருக்கிறார். இதனை உருவக மாலையாகவும் முதன் முதலில் தந்த பெருமை சுந்தரம்பிள்ளைககே உரியது.

னும் நாட்டபிமானம் ஆக்கிய சினத்தீ அன்றோ. வானோக்கி எந்நாளும் இருப்போம்'. அதாவது இந்த ஆங்கிலேயருடைய ஆட்சி அகலவேண்டும்.

வானோர்க்கு விருப்பமானது நாட்டபிமான

## பேராயர் கலாநிதி ஜெபநேசன்

இறுதியாக் மகாகவி பாரதி 'நாங்கள் நாற்பது கோடி மக்களும் நாய்களோ அன்றி சேய்களோ? நீங்கள் மட்டும் மனிதர்களோ' என்று தைரியமாகக் கூறியது, இங்கே புருஷோத்மனுடைய பாத்திரமாகக் காட்சியளிக்கிறது. பாண்டிய மன்னன ஜீவகவழுதி தன்னுடைய வீரர்களையெல்லாம் அழைத்துத் தளபதிகளுக்கெல்லாம் சொற்பொழிவாற்றுகிறான். அந்தச் சொற்பொழிவிலே 'இன்று நீர் சிந்தும் இரத்தம் ஓர் துளியும் நின்று பலவும் மும் பாஷாபிமானமும்தான் என்று பாண்டிய மன்னன் ஜீவகவழுதி வாயிலாக சுந்தரம்பிள்ளை சொல்கிறார்.

ஆகையினாலே மகாகவி பாரதி அவர்கள பிற்காலத்தில் கூறியவற்றையெல்லாம் துணிந்து பயப்படாமல் வீராவேஷத்துடன் கூறியவற்றையெல்லாம் ஓர் அரசாங்க உததியோகத்தன் என்ற முறையிலே தன்னுடைய உள்ளக் கிளர்ச்சிகளையெல்லாம் எடுத்து வைத்தவர் சுந்தரம்பிள்ளை. அதனால அவரைப் பாரதிக்கு முன்வந்த விடுதலையின் வெள்ளி முளைப்பு என்று கூறலாம். □

---

## ஆக்க அலங்காரப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

ஆத்திசூடி வீதி கந்தர்மடத்தில் இயங்கும் ஐ.ஏ.ரி சித்திரப்பயிற்சி நிறுவனம் அலங்காரக் காட்டுருக்கள் என்ற தமது நிறுவன வெளியீடு ஊடாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடாத்திய ஆக்க அலங்காரப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர் விபரம் வருமாறு,

முதலாம் இடம் - பசுபதி ராம்ஜி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

இரண்டாம் இடம் - சர்மலா சந்திரதாசன், யா/பண்டத்தரிப்பு மகளிா உயர்தர பாடசாலை. தயாளினி கிறிஸ்டின் • யா/ சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.

மூன்றாம் இடம் - டியூளினி கிறிஸ்ரியன், யா/திருக்குடும்ப கன்னியர் மடம். தனேந்திரன் ஐனோர் எமோர்ஷன், யா/புனித பத்திரிசியர் கல்லூரி. (க)

## தீவகவலயத்துக்கான வலயமட்ட தமிழ்மொழித்தினப் போட்டிகள்

(புங்குடுதீவு)

தீவக வலயத்துக்கான வலயமட்ட தமிழ்மொழித் தினப் போட்டிகளில் நாளை மறுதினம் சனிக்கிழமை மு.ப. 9 மணிக்கு ஊர்காவற்றுறை யா/புனித அந்தோனியார் கல்லூரியில் பேச்சு, வாசிப்பு, கதைகூறல், பாவோதல் உட்பட சகல கலைத்திறன் போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

மறுநாள் 22ஆம் திகதி காலை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு ஊர்காவற்றுறை யா/புனித அந்தோனியர் கல்லூரியில் நாட்டுக் கூத்துப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, மாகாண மட்ட மாவட்ட எழுத்தாக்கப் போட்டிகள் 28ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யா/வேம்படி மகளிர் கல்லூரியிலும், மாவட்ட நிலைத் தமிழ் மொழித் தினப் போட்டிகள் 29ஆம் திகதியும் யா/வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

ஜூன் மாதம் 30ஆம் திகதி மாகாண நிலை தமிழ்மொழித் தினப் போட்டிகளும் மறுநாள் 31ஆம் திகதி மாகாண நிலை தமிழ்மொழித் தினவிழாவும் நடைபெறவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-126)



நல்லூர் அரசடி செல்லப்பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவத்தில் 'மகாபாரதம் காட்டும் இந்துசமய விழுமியங்கள்' எனும் விடயம் பற்றி செஞ்சொற் தமிழ் வித்தகன் தமிழ்வேந்தன தொடர் சொற்பொழிவாற்றினார். இந்நிகழ்வுக் காட்சியைப் படத்தில் காணலாம்.

(படம்:சுண்டுக்குளி நிருபர்)

## சமுர்த்தி வங்கி சுயதொழில் கடன்

(கல்வயல்)

சாவகச்சேரி சமுர்த்தி வங்கியின் பயனாளிகளுக்கு சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்காக 20 ஆயிரம் ரூபா கடன் சமுர்த்தி வங்கியால் வழங்கப்படுகிறது. (க-7-36)

## நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய கலாசாலைகளின் 2005ஆம் கல்வியாண்டிற்கு ஆசிரிய மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 26,27,28ஆம் திகதிகளில் கோப்பாய ஆசிரிய கலாசாலையில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சை அழைப்புக் கடிதங்கள் ஏற்கெனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ஆஸ்ரீஸ்கந்தமூர்த்தி தெரிவித்துள்ளார். (ற)

## மக்கள் கடை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் மக்கள் கடை ஒன்று கடந்த மாதம் சாவகச்சேரி வடக்கு இலுவம்பிள்ளையார் ஆலயம் முன்பாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. (க-21)

## யோகாசன கண்காட்சி

(மருதங்கேணி)

பருத்தித்துறை தும்பளை யோகசாந்தி நிலையத்தினர் நாளை வெள்ளிக்கிழமை மாணவர்கள் உடல் உள நலன் கருதி கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் இலவச யோகாசன கண்காட்சியை நடத்தவுள்ளனர்.

இக் கண்காட்சி மகாவித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. (க-7-35)

## உடற்பயிற்சிப் போட்டி

(பொன்னாலை)

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் உரும்பிராய் இந்துக் கல்லூரியும், பெண்கள் பிரிவில் யாழ்.இந்து மகளிர் கல்லூாயும் முதலிடம் பெற்று சம்பியனாகியுள்ளன.

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த உடற்பயிற்சிப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் 2ஆம் இடத்தை புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியும், 3ஆம் இடத்தை அத்தியார் இந்துக் கல்லூரியும் பெற்றன.

பெண்கள் பிரிவில் 2ஆம் இடத்தை பெரியபுலம் மகாவித்தியாலயமும், 3ஆம் இடத்தை அச்சுவேலி மத்திய கல்லூரியும் பெற்றன. (க-7-49)

## காமுகனின்....

(6.ஆம் பக்கத் தொடர்ச்சி)

நைட்டியுடன் அறையிலே அடைக்கப்பட்டிருந்த நாகேஸ் வரியைத் தாங்கள் மீட்டிராவிட்டால் அவள் நிச்சயம் இறந்து போயிருப்பாள் என்றும் தெரிவித்தனர் அவர்கள்.

சுதாகரனுடன் பணத்தாலும் அரசியல் செல்வாக் காலும் மோதுவதற்குப் பலமற்ற நாகேஸ்வரியின் குடும்பம் எதிர்காலத்தைக் கேள்விக்குறியுடன் நோக்கியபடி உறவினர்களும் நண்பர்களும் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் குமுறிக் குமுறி அழுதபடி அச்சிறிய வீட்டுக்குள் அடைபட்டுக் கிடக்கிறது.

சிலவேளை சுதாகரன் வழக்கிலிருந்த விடுபட்டு விரைவில் இன்னொரு நாகேஸ்வரியைத் திருமணத் செய்து இதே நாடகத்தை மறுபடியும் அரங்கேற்றக்கூடும். ஆனால் எத்தனை நாட்களுக்கு தெருவாசிகளும் அரசியல் கட்சிகளும் நண்பர்களும் நாகேஸ்வரிக்குத் துணையாக இருப்பார்கள்.

அல்லலப்பட்டு ஆற்றாது அழு கின்ற நாகேஸ்வரியின் கண்ணீரை யார் துடைப்பார்கள்?

## காமுகன் கையில் சிக்கிய கட்டிளம் பெண்

# தப்பிப் பிழைத்தவள் கூறும்

"நீலத்தாடிக்காரன்" (Blue Beard) என்ற ஆங்கிலக் கதையை சிறுவயதில் அனேகமானவர்கள் படிததிருப்பார்கள். அந்தக் கதையில் நீலத்தாடி வைத்த ஒருவன் அழகான இளம்பெண்ணைத் திருமணம் செய்து தனித்த ஒரு வீட்டுக்கு அழைத்து வருகிறான். அந்த வீட்டில் பல அறைகள் இருந்தன. அவற்றுள் ஒரு அறை மட்டும் எப்பொழுதும் பூட்டியேயிருக்கும். நீலததாடிக்காரன் தன் புது மனைவியிடம 'நீ இந்த வீட்டில் எநத அறைக்கு வேண்டுமானாலும போகலாம் ஆனால இந்தப் பூட்டிய அறைக்கு மாத்திரம் போகக்கூடாது. போனால நாமிருவரும் நிரந்தரமாகப் பிரிந்து விட வேண்டியிருக்கும்" என்றான். அந்தப் பெண் ஆரம்பத்தில் அந்த அறையைப் பார்ப்பதைக்கூடத் தவிர்த்து வந்தாள்.

### பூட்டிய அறை மர்மம்

ஆனால் ஒருநாள் அவளது ஆர்வம் மிதமிஞ்சிப் போக, எவரும இல்லாத நேரத்தில் அந்த அறையைத் திறந்து உள்ளே போய்ப் பார்த்தாள். உள்ளே... வரிசை வரிசையாகச் சவப்பெட்டிகள். அப்பெட்டிகளுக்குள் அழகிய இளம் பெண்க்ளின் சடலங்கள். அவள் பதறிப்போய் வெளியே வரும் நேரத்தில் கணவன் நீலத்தாடி வந்துவிட்டான். இவளைப் பார்த்துச் சிரித்தான். "கடைசியில் ஒரு காலிச் சவப்பெட்டி இருக்கிறது பார். அது உனக்குத்தான் போய் அதனுள் படுத்துக்கொள்" என்றான்.

அதிர்ச்சியாக இருக்கிறதா? இந்தக் கற்பனைக் கதையைப் போலக் கிட்டத்தட்ட அப்படியே நடந்திருக்கிறது திருச்சியில் ஒரு அபலைப் பெண்ணுக்கு.

அவள் பெயர் நாகேஸ்வரி நாகதேவன் - ராஜலக்ஷ்மி தம்பதிக்கு மூன்று பெண் குழந்தைகள் திருச்சி கும்பக்குடியில் ஒரு கல்குவாரியை ஒட்டியிருக்கும் தெருவில் இருக்கிறது அவர்கள் குடியிருக்கும் வீடு.

கடைசிப் பெண்ணான நாகேஸ்வரி 10ஆம் வகுப்பு வரை படித்திருக்கிறாள். வயது 23. தாய் தந்தையரின் சம்மதமில்லாமல் காதல் திருமணம் செய்து குழந்தைகள இரண்டு பெற்று குடுமபத்தாரால் வீட்டை விட்டு விரட்டப்பட்டு தாய் வீட்டில் வசித்து வருகிறாள்.

இவர்களது குடும்ப நண்பரும் கலியாணத் தரகருமான மூர்த்தி மூலம் இவர்களை அணுகினான் நமது கதையின் கதாநாயகனான சுதாகரன்.

1949ஆம் வருடம் பிறந்தவன். சுதாகரனுக்குச சொந்த ஊர் கேரள மாநிலம் திருச்சூர். இவனது தந்தைக்கு மரவியாபாரம். சுதாகரனும அதே தொழிலைச் செய்து வந்தான். சுதாகரனின் முதல் மனைவியின் பெயர் சியாமளா. திருச்சூரியலேயே பிறந்து வளர்ந்தவள். இவர்களுக்கு ஒரு பெண்ணும் ஓர் ஆணுமாக இரண்டு குழந்தைகள் பிறந்தன.

1988 ஆம் ஆண்டில் சுதாகரனின் மனைவி சியாமளா இறந்துவிடடாள். இப்பொழுது சுதாகரனின் வயது 50. சுதாகரனின் முதல் பெண் திருமணமாகி கணவனுடனும் 7 வயதுப் பெண் குழந்தையுடனும் கேரளாவில் வசிக்கிறாள். 24 வயதான மகன் சைனு பெங்களூரில் வசிக்கிறான்.

### மாயமாக மறையும் மங்கைகள்

திருச்சியில் தில்லைநகர் 7ஆவது வீதியில் தனி வீட்டில் வாழும் சுதாகரன் பற்றித் தெருவாசிகள் பல திடுக்கிடும் கதைகளைச் சொல்கிறார்கள. பல பெண்களைக் கலியாணம் செய்யாமலே கூட்டிவந்து குடும்பம் நடத்துவதாகவும் அவர்கள் திடீர் திடீரென்று காணாமல் போய்விடுவதாகவும் பல கதைகள்.

இப்படிப்பட்டவனான சுதாகரனுக்கு பெண் கேட்டு வருகிறார் தரகர் மூர்த்தி. நாகேஸ்வரிக்கு இத்திருமணத்தில் விருப்பமில்லை. ஆனால் அவளது தாய் சுதாகரனின் ஆசை வார்த்தைகளை நம்பிவிட்டதால் மெல்ல மெலல் நாகேஸ்வரியின் மனதைக் கரைத்து இருவருக்கும் கல்யாணம் செய்து வைத்தார்.

வழமையாக நடப்பது போல கல்யாண மண்டபத்திலோ அல்லது கோவிலிலோ இத்திருமணம் நடைபெறவில்லை. சுதாகரன் வீட்டிலேயே நடைபெற்றது.

திருமணமான நாகேஸ்வரிக்கு எத்தனையோ அதிர்ச்சிகள். சுதாகரனுக்கு நிறைய நண்பர்கள் அவர்கள் எல்லோரையும் வீட்டுக்கு வரவழைத்து நாள் முழுவதும் குடித்துத் தீர்ப்பதுதான் சுதாகரனின் வேலை. சுதாகரனுக்கு சம்பளமில்லாத வேலைக்காரியாக, சமையற்காரியாகப் பகலெல்லாம் வேலை செய்வது உனக்கும் அதே கதிதான்' என்று மிரட்டியிருக்கிறான்.

அக்கம் பக்கத்தில் குடியிருந்தவர்கள் மூலம் இந்தக் கதைகளை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறாள் நாகேஸ்வரி.

இதற்கிடையில் சுதாகரனின் தம்பி மகன் ஊரிலிருந்து வந்திருக்கிறான். அவனிடம் நாகேஸ்வரி வீட்டில் வேலை செய்ய வந்த பெண் என்றும் மாதச் சம்பளம் ருபா 750 என்றும் சொல்லி அறிமுகப்படுத்தியிருக்கிறான். அவனிடம் மாத்திரமல்ல மற்றும் பலரிடமும் நாகேஸ்வரி வீட்டு வேலைக்காரி என்றுதான் சொல்லியிருக்கிறான்.

இந்தப் பெண்ணுக்கு இத்தனை கொடுமைகளா என்று அதிர்ச்சிடையாதீர்கள். இன்னும் எத்தனையோ இருக்கின்றன.

### காமுகனிடம் சிக்கிய கன்னி

சுதாகரனிடம் வரும் நண்பர்கள் செய்யும் அட்டகாசம் பற்றிச் சொல்ல முடியாது. வீட்டில் ஒரு பெண் இருக்கிறாளே என்ற எண்ணம் சிறிது கூட இல்லாமல் இவருடன் மதுபானமருந்த வரும் நண்பர்கள் நாகரிகமில்லாமல் நடந்து கொள்வார்கள். காதால் கேட்க முடியாக ஆபாச வார்த்தைகள்,

### புலியின் பிடியில் புல்வாய்

விசாரணை முடிந்து வீடு திரும பியதும் நாகேஸ்வரியை வெறும் நைட்டியுடன் ஒரு அறைக்குள்விட்டுப பூட்டி மூன்று நாட்களாக அன்ன ஆகாரமின்றித் தவிக்கவிட்டிருக்கிறான் சுதாகரன் இதனால் நாகேஸவரி அறிவு மயங்கிவிட்டபோதிலும் அவளை அறைககுள்ளேயே அடைத்துவைத்திருக்கிறான். விஷயமறிந்த அந்தத் தெரு மக்கள கூட்டமாக அவன் வீட்டுக்குள் புகுந்து கதவை உடைத்து அறிவு மயங்கிக்கிடந்த நாகேஸ்வரியை ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறார்கள்.

இப்போது நாகேஸ்வரி வசிப்பது அதளபாதாளமான கருங்கல் பாறையோடு சேர்நத தனது தாயாரின வீட்டில். பத்திரிகையாளர்கள் அவரைச் சந்திப்பதற்குப் போன பொழுது முதலில் அவர்கள் பேச மறுத்தார்கள். காரணம் முதல்நாள் தான் பெண் பொலிஸ் கோஷ்டி அவரை மிரட்டி அழைத்துச் சென்று வீடியோ படம் எடுத்து, நடந்ததை எவருக்கும் கூறக்கூடாது என்று மிரட்டி அனுப்பியிருந்ததுதான். பொலிஸ் நிலையத்தில் சுதாகரன் எழுதிக் கொடுத்திருந்த கேள்விகளை ஒரு துண்டுக் காகிதத்தில் பார்த்துப் பார்த்துக் கேட்டார்கள்.

### சுதாகரனின் கட்டுக் கதை

நாகேஸ்வரிக்கு அந்தத் தெரு நிறைய கள்ளக் காதலர்கள் இருப்பதாகவும், அவர்கள் மூலம் வீட்டிலிருந்து நகை, பணம், பண்டபாத்திரம் முதலியவற்றைத் திருடி தனது தாயாருக்கு அனுப்பிவருவதாகவும், அவர்கள் மூலம் தன்னைக கொலை செய்ய நாகேஸ்வரி முயனறதாகவும் கதையளக்க ஆரம்பித்தார்.

அப்படியானால் அதுபற்றி ஏன் பொலிஸில் புகார் செய்யவில்லை என்று கேட்டபோது, தனது சட்டத்தரணி புகார் செய்யவேண்டியது அவசியமில்லை எனக் கூறியதாகக் கூறினார்.

அப்படியானால் நேரடியாக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருக்கலாமே என்று கேட்டதற்கு தனது சட்டத்தரணி பணம் பறிப்பதிலேயே குறிப்பாக இருப்பதாகவும் அவரை மாற்றி வேறொரு சட்டத்தரணி மூலம் நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் கூறினார். இடையில், தண்ணீர் குடித்துவிட்டு வருவதாகக் கூறி சுதாகரன் உள்ளே சென்ற போது மேசை மீது கிடந்த தபால் உறை ஒன்று செய்தியாளர்கள் கண்ணில் பட்டது. அதை எடுத்துப பார்த்த செய்தியாளர்கள் திடுக்கிட்டுப் போனார்கள். அதற்குள் 25,30 படங்கள் இருந்தன. அத்தனையும் நாகேஸ்வரி மயங்கிக் கிடந்தபோது நிர்வாணக் கோலத்தில் விதம் விதமாக எடுக்கப்பட்ட நீலப்படங்கள்.

# பயங்கர சோகக் கதை

தான் தன் தலைவிதி என்ன அவள் நினைத்தாள். சுதாகரன் சொன்னது போல அவன் குடியிருக்கும் வீடு அவனுக்குச் சொந்தமானது அல்ல என்பதும், தான் சற்று ஏமாந்தால கழுகுபோல் தன்னை வட்டமிடும் கணவனின் நண்பர்களுக்குத் தான் இரையாக வேண்டிவரும் என்பதும் அவளுக்குத் தெரிய வந்தது.

### சுதாகரனுக்குப் பலியான பெண்கள்

இதற்கெல்லாம் சிகரம் வைத்து போல் ஒருநாள் ஒரு செய்தித் தாளைச் சுதாகரன் ஆர்வமாகப் படிப்பதை நாகேஸ்வரி கண்டிருக்கிறாள். அதுவும் ஒரு தற்கொலை பற்றிய செய்தி. திருமணமான ஒரு சில நாளில் இளம் பெண் சாவு என்ற செய்தியை நாகேஸ்வரி படித்துப் பார்த்துவிட்டு அனுதாபம் தெரிவிக்கச் சுதாகரனுக்குப் பயங்கர ஆத்திரம் வந்திருக்கிறது. உள்ளே போய் சமையல் வேலையைப் பார் என்று நாகேஸ்வரியை விரட்டி விட்டு அந்தப் பத்திரிகைத் தாளைத் துண்டு துண்டாகக் கிழத்துக் குப்பைக் கூடைக்குள் போட்டுவிட்டு வெளியே போகிறான் சுதாகரன். அவன் வெளியேபோனதும் கிழிந்த துண்டுகளை ஒன்றாகச் சேர்த்துப் படித்திருக்கிறாள் நாகேஸ்வரி. திருமணமான சில மாதங்களிலேயே தற்கொலை செய்து இறந்ததாகக் கூறப் படும் ஒரு பெண்ணின் சோகக் கதை அது. மாலை சுதாகரன் திரும்பி வந்துதும் இதைப்பற்றி அவள் கேட்க, அவள் என் மனைவிகளில் ஒருத்தி. அவள் மட்டுமல்ல, வசுந்திரா, லதா, தமிழ்ச்செல்வி, வாசுகி, கோமளா என்று 1988முதல் தான் பல பெண்களைத் திருமணம் செய திருப்பதாகச் சொல்லிச் சிரித்திருக்கிறான் சுதாகரன்.

'பேசாமல் அடங்கியொடுங்கி இருப்பதானால் இரு இல்லாவிட்டால் கதைகள் எல்லாம் பேசிக் சிரிப்பார்கள். சதது மாத்திரை என்று ஏதேதோ வில்லைகளைத் தந்து சாப்பிடச் சொல்வார்கள். மறுத்தால் கண்மண் தெரியாமல் அடிப்பார்கள். அதைச் சாப்பிட்டால் அறிவு மயங்கிவிடும். பிறகு என்ன நடக்கிறது என்றே தெரியாது. உன்னை நிர்வாணமாகப் படம் எடுத்திருக்கிறோம். பத்திரிகைகளில் போடுவோம் என்றெல்லாம் மிரட்டுவார்கள்.

இவர்களிடம் சிக்கி நான் படும் சித்திரவதையை எப்படியோ கேள்விப்பட்ட அப்பா என்னைப் பார்க்க வந்தார். அவரை உள்ளே விடவே மறுத்துக் கேவலமாகத் திட்டினார்கள். அவர் பட்ட துன்பத்தைக் காணச் சகிக்காமல் நான் உள்ளே இருந்தபடியே நான் சுகமாக இருக்கிறேன். நீங்கள் போய் வாருங்கள் என்று சொல்லி அனுப்பினேன். அவர் தெருவில் இறங்கியதும் இவரது நண்பர்களில் ஒருவரான அன்வர் என்பவர் அவரைத் தெருவில் தள்ளி விழுத்திக் கழுத்தில் துண்டைப் போட்டு இறுக்கிக் கொலைசெய்ய முயற்சித்திருக்கிறார்.

நடுத்தெருவிலே வயோதிபர் ஒருவருக்கு ஏற்பட்ட கொடுமையைக் கண்டு கொதித்தெழுந்த அத் தெரு மக்கள் அன்வரைத் தடுத்து தாக்க, அதைத் தடுக்கச் சென்ற சுதாகரன் கோஷ்டி எதிர்த்துத் தாக்க, பெரிய களேபரமாகி பொலிஸ வந்தது.

வந்த பொலிஸ் இன்ஸ்பெக்டரை சுதாகரன் பெயரிட்டு அழைத்து வீட்டுக்குள கூட்டிப் போய் இருக்கிறார். இதனைக் கண்டு சகிக்காத அத்தெருவில் வசிக்கும் வழக்கறிஞர் ஒருவர் பொலிஸ் கமிஷனருக்கு முறையிட, அவர் இரு பகுதியினரையும் கூப்பிட்டு விசாரித்திருக்கிறார். அங்கு நாகேஸ்வரி தனது மனைவிதான் என சுதாகரன் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

### இலாபம்பெற முயலும் அரசியல் தரகர்

அவரை ஒருவாறு சமாதானப் படுத்தி செய்தியாளர்கள் பேட்டியை ஆரம்பிக்கும் நேரத்தில் தடாலடியாக பார்த்திபன் என்கிற குட்டி அரசியல்வாதி ஒருவர் உள்ளே நுழைந்தார்.

அவர் தனது அரசியல் செல்வாக்கைப் பெருமையுடன் விளக்கியதோடு தான் சொடக்குப் போட்டால் பொலிஸ் வாலைக் குழைத்துக் கொண்டு எல்லாவற்றையும் செய்யும் என்றார். அப்படியானால் இதுவரை ஏன் எதுவும் செய்யாமல் இருந்தீர்கள் என்று கேட்டபோது, செய்தியே தனக்கு இப்பொழுது தான் தெரிந்தது என்றார். செய்தியாளர்கள் திகைத்துப் போனார்கள். ஏறத்தாள 10 நாட்களுக்கு மேலாக உள்ளூர்ப் பத்திரிகைகளிலும் வார இதழ்களிலும் நாகேஸ்வரியின் பரிதாபக் கதை வந்துவிட்டதைச் சுட்டிக்காட்டியபோது இவர்கள் இது பறறித் தன்னிடம் இன்றுவரை ஒனறுமே சொல்லவில்லை என்றார். இதிலிருந்து நாகேஸ்வரியை வைத்து அரசியல் லாபமும் பணலாபமும் பெற பலர் முனைந்து நறதை உணரககூடியதாக இருநதது.

அங்கிருந்த புறப்பட்ட செய்தியாளர்கள் சுதாகரனைக் காணச் சென்றபோது மாலைநேரம் மணி நானகு. கதவைத் தட்டியதும் அதைத திறக்க அவர் வருவதற்கு முன'குப் எனறு மதுவாடை முன்னே வந்தது.

செய்தியாளர்கள் விபரத்தைச் சொன்னதும் முதலில் தயங்கினார். இந்த விவகாரத்தால் தான் தற்கொலைக்கு முயன்றதாகவும் தனது உடல்நிலை வெகுவாகச் சீர்கெட்டு விட்டதாகவும் சொல்லிச் செய்தியாளர்களைத் தவிர்க்கப் பார்த்தார். செய்தியாளர்களும் அவரது வழியிலேயே சென்று பேட்டிக்கு அவரை சம்மதிக்க வைத்தனர்.

### நீலப்பட வியாபாரி

கடித உறையைக் கையிலெடுத்த செய்தியாளர்களின் கண்ணில் படடது பக்கத்திலிருந்த ஒரு கோட்பு. அதைப் புரட்டியவர்களுக்கு அதிர்சசிமேல் அதிர்ச்சி. பல்வேறு கோணங்களில் நிர்வாண கோலத்தில் படம பிடிக்கப்பட்ட அழகிய இளம்பெண்களின் வண்ணப் படங்கள்.

நிர்வாணப்படங்களை அனுப்பி வைக்குமாறு மேலை நாட்டு நிறுவனங்களால் அனுப்பப்பட்டிருந்த கடிதங்கள்.

**பொ.இராசதுரை**

இளம் பெண்களைத் திருமணம என்ற போர்வையில் அழைதது வந்து நயத்தாலும் பயத்தாலும் மிரட்டி மயக்கமருந்து கொடுத்து மயங்கவைத்து நிர்வாணக் கோலததில் புகைப்படமெடுத்து மேலநாட்டுப பத்திரிகைகளுக்கும் தனியாடகளுக்கும் விற்பனை செய்வதே சுதாகரனின் பிரதான தொழில் என்பது செய்தியாளர்களுக்குப் புலனாகிறது.

நண்பர்களுடன் சேர்ந்து குடிக்கவும் களியாட்டம் போடவும் சுதாகரன் கையில் ஏராளமாகப் பணம் புழங்கிய காரணம் இதனால் வெட்டவெளிச்சமாகிறது. ஏற்கனவே திருமணம் செய்து காணாமல்போன அல்லது கொலை செய்யப்பட்ட வசுநதிரா, லதா, தமிழ்ச்செல்வி, வாசுகி, கோமளா என்ற பட்டியலில் நாகேஸ்வரியும் ஒருத்தி.

### நெளிந்த நீதி

நாகேஸ்வரி தொடர்பு வைததிருப்பதாக சுதாகரன் கூறிய இளைஞர்களைச் செய்தியாளர்கள சநதித்தபோது ஒரு கூட்டம் ஒரு அப்பாவிப் பெண்ணை சித்திர வதை செய்வதைப் பொறுக்க முடியாமல மனிதாபிமான அடிப் படையிலேயே உதவி செய்யப் போனதாகவும்.....

(...7 ஆம் பக்கம் பார்க்கவும்)

# நம்மவர்கள் வெளிநாடு சென்றதால் எமது கலாசாரம் சீரழிந்துள்ளது

## விவாத அரங்கு - 8

**நம்மவர்கள் வெளிநாடு சென்றதனால் எமது கலாசாரம் சீர்பெற்றுள்ளதா? சீரழிந்துள்ளதா? என்ற விவாத அரங்கிற்கு, சீரழிந்துள்ளது எனத் தமது வாதங்களை முன்வைக்கின்றனர் அச்சுவேலி தெற்கு சுகந்தினி முருகேசு மற்றும் ம.கீதா ஆகியோர்.**

**மு.சுகந்தினி**
**அச்சுவேலி**

'பாடையிலே என்னுடல் படுத் துறங்கும் வேளையிலும் பைந் தமிழின் பூபாளம் பாரில் ஒலிக்க வேண்டும்' என்று தமிழுணர்வு பொங்க, தூங்கும் தமிழினத்தை தட்டியெழுப்பி தமிழர்க்கென்றொரு பண்பாடு, கலாசாரம், ஒழுக்கம், உரிமை, கடமைகளுடன் கட்டுப்பாடாக இருந்த நமது கலாசாரம் இன்று அந்நிய மொழி, நாகரிகம், மதம், கலாசாரம் என்று தன்னை பலவழிகளிலும் இட்டுச் சென்று அந்நிய மோகத்திலே அரைமீற்றர் துணியினிலே பெண்ணியம் இன்று ஊசலாடும் கலாசாரமாக மாறியிருப்பது ஏன்? இன்று விவாத மேடையேறும் அளவுக்கு எமது கலாசாரம் விரிசல் கொண்டது ஏன்? இவற்றிற்கெல்லாம் தமக்கென்று தனிநாடு, தொழில், பண்பாடு, பழக்கவழக்கம், மொழி உரிமை, மதம், வளம், ஆகியவற்றை வரையறுத்து வாழ முடியாத நமது சமுதாயம் அடுத்தவனிடம் பிச்சை ஏந்திநிற்பதை உயர்வான இலட்சியமாகவும் கௌரவமாகவும் தகுதியாகவும் எண்ணும் எம்மவர்களின் வெளிநாட்டுப் பயணத்தாலேயே ஆகும். இதனால் எமது கலாசாரம் சீரழிந்துள்ளது என்பதே எனது வாதமாகும்.

ஒருவனோடொருத்தி என்று வாழ்ந்து வந்த எமது கலாசாரம் இன்று நம்மவர்கள் வெளிநாடு சென்றதால் பலபேருக்கு ஒருத்தி என்றோ அல்லது ஒருத்தனுக்கு பலபேர் என்றோ கூறும் எயிட்ஸ் கலாசாரமாக மாறி எம்மினத்தையே சீரழித்துக் கொண்டிருப்பது கண்கூடு.

முத்தமிழ் வளர்த்து தமிழென்னும் அரசி அரியணை ஏறியிருந்த காலம் மலையேறிப் போய், இன்று அத் தமிழென்னும் அரசி, தனித்தமிழ் நடைஅன்றி மணிப்பிரவாள நடையுடன் ஆங்கில மொழி கலந்து பேசும் கலாசாரமாக சீரழிந்து கொண்டிருப்பது நம்மவர் வெளிநாடு சென்றதாலேயே ஆகும்.

குங்குமப் பொட்டிடும் - காரிகையாய் தங்கத்துகில் உடுக்கும் தாமரை மொட்டுக்களாய், பத்தாவிற்கேற்ற நல்ல பதிவிரதைகளாய் வாழ்ந்த எமது பெண்கள் இன்று அவிழ்த்துவிட்ட சடைத் தலையுடன், மாங்கல்யம் மறைத்து, ரீசேட் அணிந்து, நுணுக்குக்காட்டியாலும் நோக்கமுடியாத ஸ்ரிக்கர் பொட்டுமிட்டு, உயரமான பாதணியும், கட்டையான பாவாடையும் அணிந்து கொண்டு காட்டுமிராண்டித் தாயாராய், கிழவிகளும் குமரிகளாய் திரிவது ஏன்?

இன்றைய பெண்களைக் கண்டால் அன்றைய பாரதி நம்மவர் கலாசாரம் கண்டு பதறித் துடித்திருப்பார்.

இன்று நம்மவர் வாழும் நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கும் கொலை, கொள்ளை, பலாத்காரம், சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற செயற்பாடுகள் எமது முன்னோர் வாழ்ந்த காலத்தில் நிகழ்ந்தனவா? இல்லவே இல்லை. ஏனெனில் எமது அன்றைய சமுதாயம் இப்படித்தான் வாழவேண்டும் என்ற வரையரைக்குட்பட்டே வாழ்ந்தது. ஆனால் எப்போது அந்நிய மோகத்திலே நமீமவர்கள் திளைத்து, ஆன்மீக உணர்வு குன்றி அடிமைகளாய் வாழத் தலைப்பட்டனரோ அப்போதே எமது பண்பாடும் எப்படியும் வாழலாம் என்ற வரைவிலக்கணத்தை வகுத்துவிட்டது என்று கூறினால் அது மிகையாகாது.

வெளிநாடு சென்ற நம்மவர்கள் பலரின் உறவினர்கள் தம் வீட்டிற்கு விருந்தாளியாக வர முனையும் காலத்திலே அவர்களின் மொழி, நடை, உடை பாவனை அனைத்தையும் தாமும் பின்பற்றி நடக்க வேண்டும் என்று முனைகின்றார்கள்.

மாட்டுவண்டியேறி பயணமான நமது சமுதாயம் இன்று எயிட்ஸ், சார்ஸ் என்று ஏராளமான நோய்களுடன் ஹயஸ் வாகனங்கள் கதறும் கோண் சத்தத்துடன் செவிப்பறை மென்சவ்வு வெடித்துச் சிதற, விரைந்து செல்வதால் எமது நாடோ அல்லது எமது சமுதாயமோ அபிவிருத்தி அடைந்து விட்டது என்று பொருளல்ல. மொத்தத்தில் எமது தலாவருமானமும், நாணயமாற்று வீதமும் மொத்தத் தேசிய உற்பத்தியும் வீழ்ச்சி கண்டுள்ளன என்பதே உண்மை.

இந்நிலமை வர எம்மவர் வெளிநாட்டு வாழ்க்கை தேடி ஓடிப்போனமையே காரணமாகும்.

மற்றும் நம்மவர் வெளிநாடு சென்றதால் ஆண்களுக்கு ஏற்று மதியாகும் பெண்களும், பெண்களுக்கு ஏற்றுமதியாகும் ஆடவர்களும் என்ற நிலை காணப்படுகிறது. வாழ்க்கையின் நோக்கமே வெளிநாட்டுக் கல்யாணம் என்ற பண்பாட்டுச் சீர்கேட்டை இது கொண்டு வந்திருக்கின்றது.

பயணத் தரிப்பிடங்கள், வழிபாட்டுத்தலங்கள், பாடசாலைகள், தனியார் நிறுவனங்கள், பொதுவிடங்கள், வங்கிகள், வர்த்தக நிலையங்கள் எல்லாம் இன்று காமக் களியாட்ட இடங்களாகவும் பேருந்துகள் காதலர் சாலைகளாகவும் மாறியிருப்பது வெளிநாட்டுக் கலாசாரமேயாகும்.

தொகுத்து நோக்கும் போது எம்மவர் வெளிநாடு சென்றதால் எமது கல்வி, பொருளாதாரம், உற்பத்தி ஊக்குவிப்பு திறன், தொழில் வலிமை, அந்தஸ்து, மானம், மரியாதை, பண்பாடு, பழக்கவழக்கம், செயலாற்றல், மொழி, மதம், இனம் போன்ற அத்தனையுமே சீரழிந் துள்ளது எனலாம். □

---

## வாதம் - 3

**ம.கீதா**

**வெ**ளிநாடு வெளிநாடு என்று எமது இளைஞர், யுவதிகள் தாய் நாட்டை விட்டு அந்நிய நாட்டிற்கு படையெடுத்தார்கள். தாய், தந்தையர் தங்களது கஷ்ட நிலையிலும் சொத்துக்களை விற்ற பணத்தில் பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்தார்கள். ஏன் அனுப்பி வைத்தார்கள்? பெண் பிள்ளைகளைக் கரைசேர்ப்பார்கள் வயதான பெற்றோரை கவனிப்பார்கள் என்ற நப்பாசையால் தான்.

ஆனால் வெளிநாடு சென்ற நம்மவர்களோ அந்நாட்டு கலாசாரத்தை பின்பற்றினார்கள். நவநாகரீக உடைகள், மதுபாவனை, போதை வஸ்துக்களுக்கு அடிமையாகி எமது கலாசாரத்தை சீர்குலைத்து தாங்களும் சீரழிகின்றார்கள். தாயை மறந்து, தாய் நாட்டை மறந்து, தாங்கள் நல்ல பரம்பரையில், நற் குடும்பத்தில், தமிழ் பண்பாடுள்ள தமிழ் தாயகத்தில் பிறந்தவர்கள் எனபதையும் மறந்து வாழ்கிறார்கள்.

இது மட்டுமா? நம்மவர்கள் வெளிநாட்டில் தாய் மொழியை மறந்து முலாம் பூசிய தமிழர்களாயினர். நம் இளைஞர்கள் தேசப்பற்றுடன் தாய் மண்ணை மீட்க உயிரைத் தியாகம் செய்து கொண்டிருக்கும் இவ்வேளையில், நம்மவர்கள் வெளிநாட்டில் இருந்துகொண்டு எம் தாய்நாட்டுக் கலாசாரத்தை சீரழிக்கிறார்கள். தேசத்தை மறந்து வெளிநாட்டு மோகத்தால் அங்கு கால் பதித்த நொடிப்பொழுதில் நம்மவர்கள் தமது நடை, உடை, பாவனை எல்லாம் மாறி ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசமின்றி திரிகிறார்களா. வெளிநாட்டு ஹிப்பிகள் நம் நாட்டில் திரிவதுபோல் நம்மவர்களும் அந்நிய நாட்டில் நமது கலாசாரம் பண்பாட்டுடன் ஓர் கட்டுக்கோப்புக்குள் வளர்ந்ததை எல்லாம் மறந்து வாழ்கிறார்கள். இது மிகப் பெரிய கலாசார சீரழிவு.

ஆபாச சினிமா மோகம், தவறான பாலியல் சேர்க்கைகளால் எயிட்ஸ் போன்ற கொடிய நோய்களுக்கு ஆளாக்கப்பட்டு நம் இனத்தையே அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்கிறார்கள். இக்கரைக்கு அக்கரைபச்சை என்பார்கள். வெளிநாடு சென்று வாழும் போது எமது நாட்டின் பண்பாடு, கலாசாரம் போன்ற உணர்வுகள் சிலருக்குத் தெரிவதில்லை. இந்த வகையில் நம்மவர்கள் வெளிநாடு சென்று, எமது தமிழ்ப் பாண்பாடுகளை, அன்று தொட்டு இன்று வரை பேணிக்காத்து வரும் தமிழர்களின் தேசப்பற்று உணர்ச்சிகளை குழிதோண்டிப் புதைத்து விட்டார்கள். வெளிநாட்டு மோகத்தால் நம் நாட்டு இளைஞர்கள், யுவதிகள் இந்தக் கலாசாரச் சீர்கேடுகளைத் திருத்தி நம் தமிழர் பண்புகளை பாதுகாத்து நம் நாட்டையும் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்கு யார் தான் வழிகாட்டுவார்கள்?

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்பார்கள். இப் பழமொழிக்கு ஏற்றபடி நம் மூதாதையர்கள் வெளிநாடுகளுக்கு சென்று கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை வீட்டுக்கும் நாட்டுக்கும் நற்காரியங்களுக்கும் பயன்படுத்தினார்கள். ஆனால் இன்று திரைகடல் ஓடி என்ன செய்கிறார்கள்? உழைத்த பணத்தை தீய வழிகளுக்கு செலவழிக்கிறார்கள். உல்லாச வாழ்க்கை வாழ்கிறார்கள். நாட்டை விட்டு நாடு மாறி முழு உலகத்தையும் சுற்றுகிறார்கள். அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாட்டவர்கள் தங்கள் நாட்டில் இருந்து கொண்டே சந்திரமண்டலத்திற்கு சென்றார்கள். நம்மவர்கள் தமது கலாசாரத்தை சீர்குலைத்து, வெளிநாட்டவர்களின் தீய பழக்கங்களைப் பின்பற்றி தாங்களும் கெட்டு, குடும்பத்தையும் நிர்க்கதியாக்கி வீட்டுக்கும் உதவாமல், நாட்டுக்கும் உதவாமல் வாழ்கிறார்கள். நாகரீகம் என்ற போர்வையில் நமது நாட்டு இளைஞர், யுவதியர் எமது கலாசாரத்தை சீர்குலைக்கிறார்கள். போலி வேஷங்கள் போட்டு தமது வாழ்க்கையையும் போலியாக்கி விட்டார்கள். வெளிநாட்டவர்கள் ஏழு உலகையும் ஆளப்போகும் இந்தக் காலத்தில் நம்மவர்கள் தாமே உருவாக்கிய தீயசக்திகளினால் நமது கலாசாரத்தை சீர்குலைப்பது மட்டுமன்றி தாமும் அழிந்து போகிறார்கள்.

ஆதலால், நம்மவர்கள் வெளிநாடு சென்றதனால் எமது கலாசாரம் சீரழிந்துள்ளது என்பதே எனது வாதமாகும். □





கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் பெற்றோரின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட நூலகத் திறப்பு விழாவில் விருந்தினர்களை வித்தியாலய மாணவிகள் பாண்ட் வாத்திய இசையுடன் அணிவகுத்து வரவேற்றுச் செல்வதையும், இதில் விருந்தினராகக் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் பாடசாலை அதிபர் இ.ராகவன், வடமராட்சி மற்றும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் நிற்பதையும், நூல் நிலையத்தைத் திறந்து வைத்த முன்னாள் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள் :- எஸ்.இராமச்சந்திரன்)

# கணிதபாட செயற்பாடுகளை முன்னேற்ற 5 வகையான திட்டங்கள் அமுல்படுத்தப்படும்

(கொழும்பு)

பாடசாலைகளில் கணித பாடத்துக்கான செயற்பாடுகளை முன்னேற்ற கல்வியமைச்சு இவ்வாண்டு முதல் ஐந்து வகையான திட்டங்களை அமுல்படுத்தவுள்ளது.

மாகாண ரீதியாக கணித ஆசிரியர்களுக்கு தரம் 10 கணித பாடம் தொடர்பாக பல பயிற்சிப்பட்டறைகளை ஒழுங்கு செய்தல், கணித தினம் ஒன்றை வலய மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் நடத்துதல், கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை மேலும் முன்னேற்ற விசேட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை உருவாக்குதல், தரம் 11 மாணவர்களுக்கு செய்முறைப் பயிற்சி பரீட்சைகளை ஒழுங்கு செய்தல், க.பொ.த சாதாரண தர பரீட்சையில் கணித பாடத்தில் 60 வீதமான புள்ளிகளை பெற்றுக் கொள்ளும் பொருட்டு முன்னோடிப் பரீட்சைகளை பாடசாலை மட்டத்தில் நடத்துதல்,

அத்துடன் தரம் 9 மாணவர்களுக்கு கணிப்பான்கள் வழங்குதல் என்பன அத்திட்டங்களாகும்.

மேற்படி திட்டங்கள் இந்த ஆண்டு நடைமுறைக்கு வரவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவிக்கிறது.

(க-5)

# சமுர்த்தி முகாமையாளர்களின் எதிர்காலம் கேள்விக்குறியில்

(கொழும்பு)

நாட்டிலுள்ள 2ஆயிரத்து 500 சமுர்த்தி முகாமையாளர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளதாக அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சோமசிறி லியனகே தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி முகாமையாளர்கள் தமக்கு சேரவேண்டிய சகல வருடாந்த சம்பள உயர்வுகளையும் பெற்றுள்ள போதும் அரச சேவையில் ஆறாம் தரத்திலேயே இருந்து வருகின்றனர்.

அவர்களை 5 ஆம் தரத்திற்கு பதவியுயர்வு செய்ய இதுவரை இலங்கை சமுர்த்தி அதிகார சபை நடவடிக்கை எடுக்கவில்லை.

இம்முயற்சியில் மேற்படி சபை அசமந்தப் போக்கையே கடைப்பிடிக்கிறது.

இந்த பதவியுயர்வை மேற்கொள்வதால் அரசுக்கு மேலதிக செலவு ஏற்படாது.

அதே போல் சமுர்த்தி முகாமையாளர்களின் சம்பள முரண்பாட்டுக்கும் இதுவரைக்கும் எத்தகைய தீர்வும் கிடைக்கவில்லை.

இதேவேளை நாட்டின் வறுமையொழிப்புத் திட்டம் தொடர்பாக தேசிய கொள்கையொன்று அவசியம் வகுக்கப்படவேண்டும். அன்றேல் அரசியல் வாதிகளும் அதிகாரிகளும் தமது விருப்பு வெறுப்புகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு வறுமையொழிப்புத் திட்டத்தைப் பயன்படுத்தும் நிலை தொடரவே செய்யும்.

வறுமையொழிப்புத் திட்டத்தில் புதிய விஞ்ஞான நெறிமுறைகளை கையாள வாய்ப்புகள் இருந்தும் அதன் பால் கவனம் செலுத்தப்படுவதாகத் தெரியவில்லை.

சமுர்த்தி பயனாளர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட வருமானம் ஈட்டும் தொழில் முயற்சித் திட்டங்களை முன்னெடுப்பதிலும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

எனவே சமுர்த்தி முகாமையாளர்களின் சேவை உரிய முறையில் பெறப்படவில்லை என்றே கூறவேண்டும்.

நாட்டின் பாடசாலை அதிபர்களுக்கெதிராக இன்று ஒழுக்காற்று சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகிறது.

அதேவேளை, வறிய மக்களின் பெருந்தொகைப் பணத்தை முறைகேடாக கையாடியவர்களுக்கெதிராக விரல்கள் நீட்டப்படுகிறதே தவிர எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் சமுர்த்தி வறுமையொழிப்புத் திட்டம் சம்பந்தமாக தேசிய கொள்கை ஒன்றை வகுக்கும்படி அழுத்தங்களை பிரயோகிக்கும் வகையில் போராட்ட மொன்றை முன்னெடுக்க நாம் திட்டமிட்டுள்ளோம் என்றார்.

(க-5)

# புனர்நிர்மாணப்பணிகளுக்கு தேசியக் கொள்கை அவசியம்

(கொழும்பு)

ஆழிப்பேரலை புனரமைப்புத் தொடர்பாக தெளிவான தேசியக் கொள்கை ஒன்றினை அரசாங்கம் கொண்டிருக்க வேண்டுமென உலக வங்கி கேட்டுள்ளது.

உலக வங்கி கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலையின் பின்னர் மேற்கொள்ளப்படும் புனர்நிர்மாணப் பணிகளைப் பணிகளின் போது பன் முகத்தன்மை, நடை முறைப்படுத்தல் ஆகிய விடயங்களிலே இந்தத் தேசியக் கொள்கை தேவை என உலக வங்கி தெரிவித்துள்ளது.

ஆழிப்பேரலையின் பின்னர் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள பவ்ரல் அமைப்பின் கொள்கைகளில்

வடக்கிற்கு 17.2சதவீத நிதி உதவி தேவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-4)

# மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்த புதிய திட்டம் அமுல்

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்கான புதிய திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கல்வியமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு என்பன இதனைக் கூட்டாக அமுல்படுத்தியுள்ளன.

நாட்டின் பொருளாதார அபிவிருத்...

நிச்சயப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

இந்த திட்டத்திற்கு அரசாங்கமும், உலகவங்கியும் நிதியுதவியளித்துள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்யும் முகமாக கடிதமொன்றை வெளியிடுவதற்கு கல்வியமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்...

## வலம்புரி

## பிரதேச செய்தியாளர்கள் (பயிலுநர்கள்) பதவிக்கு ஆட்சேர்த்தல்

பின்வரும் பிரதேசங்களில் பிரதேச செய்தியாளர்களை (பயிலுநர்கள்) நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

☛ பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ளவர்களும் க.பொ.த.(சா/த) இல் சித்தியடைந்தவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

☛ பயிலுநர்கள் தரத்தில் 3 மாதங்கள் ஈடுபடுத்தப்படுவர். இக்காலத்தில் சேவையில் திருப்தியும் ஒழுங்கும் ஆர்வமும் காணப்படுமிடத்து அவர்கள் நிரந்தரமாக்கப்படுவர்.

☛ பயிலுநர்களாகத் தெரிவு செய்யப்படுபவர்கள் நிறுவனத்துடன் பிணை ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.

☛ குறித்த பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டுமே அந்தந்தப் பிரதேச செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

☛ இலங்கையிலிருந்து வெளிவரும் வேறு பத்திரிகைகளிலும் ஊடகங்களிலும் செய்தியாளர்களாகப் பணியாற்றுபவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கமுடியாது.

☛ ஏற்கனவே பத்திரிகைத் துறையில் அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிப்பின் அவர்கள் நிரந்தர செய்தியாளர்களாக உள்ளீர்க்கப்படுவர்.

தகுதியானவர்கள் முழுப் பெயர் ,நிரந்தர முகவரி, தபால் முகவரி, பால், பிறந்த தேதி, தே.அ.அ. இல; விவாக நிலை ,தொழில் புரியும் இடம் ,பதவி (இருப்பின் ) கிராம சேவையாளர் பிரிவு, பிரதேச செயலா ளர் பிரிவு, பிரதேசசபைப் பிரிவு, தொலைபேசி இலக்கம்(இருப்பின்), கல்வித்தகைமை என்பவை உள்ளிட்டதாகத் தயாரிக்கப்பட்ட விண் ணப்பங்களை,

*பிரதம ஆசிரியர் வலம்புரி,*
*15 வெள்ளாந் தெரு,*
*வண்ணார் பண்ணை*
*யாழ்ப்பாணம்.*

என்ற முகவரிக்கு 31.05.2005 ஆம் தேதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அன்றேல் தபால் மூலமோ அனுப்பி வைக்கவும்.

*–நிர்வாக உத்தியோகத்தர்.*

## பிரதேச செய்தியாளர் (பயிலுநர்) தெரிவுக்கான பிரதேசங்கள்

### வலிகாமம்

திருநெல்வேலி
நல்லூர்
கந்தர்மடம்
கோண்டாவில்
கொக்குவில்
மானிப்பாய்
உரும்பிராய்
சண்டிலிப்பாய்
சங்கானை
சித்தன்கேணி
அராலி
வட்டுக்கோட்டை
மாதகல்
பண்டத்தரிப்பு
சில்லாலை
தாவடி
வல்வெட்டி
வல்வெட்டித்துறை
தொண்டைமானாறு
துன்னாலை
அல்வாய்
வியாபாரிமூலை
நாகர்கோவில்
செம்பியன்பற்று
மணற்காடு
கொற்றாவத்தை
பொலிகண்டி

### தென்மராட்சி

நாவற்குழி
மறவன்புலோ
கைதடி
நுணாவில்
சாவகச்சேரி
மீசாலை

ஆழிப்பேரலையின் பின்னர் மேற்கொள்ளப்படும் புனர்நிர்மாணப் பணிகளைப் பணிகளின் போது பன் முகத்தன்மை, நடை முறைப்படுத்தல் ஆகிய விடயங்களிலே இந்தத் தேசியக் கொள்கை தேவை என உலக வங்கி தெரிவித்துள்ளது.

ஆழிப்பேரலையின் பின்னர் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள பவ்ரல் அமைப்பின் கொள்கைகளில் தெளிவு அவசியமானதாகும்.

இதில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்கு குறித்தும் தெளிவான அம்சங்கள் இடம்பெறவேண்டும் என்றும் உலக வங்கி தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

அத்துடன் தொழில்நுட்ப விடையங்கள் குறித்தும், அரசாங்கத்திடம் கொள்கையொன்று இருக்க வேண்டுமென உலகவங்கி தெரிவித்துள்ளது.

இதேவேளை உலகவங்கியின் குறிப்பின்படி ஆழிப்பேரலையின் பின்னரான புனரமைப்புகளுக்காக கிழக்கிற்கு மாத்திரம் 41.1 வீத நிதி தேவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்கான புதிய திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கல்வியமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு என்பன இதனைக் கூட்டாக அமுல்படுத்தியுள்ளன.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் பட்டதாரிகளின் பங்களிப்பை நிச்சயப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

இந்த திட்டத்திற்கு அரசாங்கமும், உலகவங்கியும் நிதியுதவியளித்துள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்யும் முகமாக கடிதமொன்றை வெளியிடுவதற்கு கல்வியமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (க-9)

## திருநெறிய தெய்வீக விழாவில் இன்று...

(யாழ்ப்பாணம்)

திருஞான சம்பந்த சுவாமிகளின் அற்புத உற்சவத்தை முன்னிட்டு நல்லை திருஞான சம்பந்தர் ஆதினத்தால் ஆதின கலா மண்டபத்தில் நடாத்தப்பட்டுவரும் “திருநெறிய தெய்வீக விழாவில்” 5 ஆம் நாள் நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை பி.ப 4.30 மணிக்கு ஈழ நல்லூர் பி. ரஜீந்திரன் குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகவுள்ளன.

செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இன்றைய நிகழ்வில் ஏ.கோபாலகிருஷ்ணனின் வரவேற்புரையைத் தொடர்ந்து பி.ப. 5.30 மணிக்கு விகடகவி மு. திருநாவுக்கரசின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

தொடர்ந்து, மாலை 6.30 மணி முதல் 7.00 மணிவரை மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகளின் திருமுறை அரங்கும், 7.00 மணி முதல் 7.45 வரை இசையரங்கும், இரவு 7.45 மணிமுதல் 9.00மணி வரை இசைக் கச்சேரியும் இடம்பெறும். (ரு)

## மத்திய மாகாண

# முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

(கொழும்பு)

மத்திய மாகாண முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வர எதிர்க்கட்சி நடவடிக்கை எடுத்து வருகின்றது.

முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஊழல் மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டுள்ளதாக எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

எனவே அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரவும் அதற்காக ஏனைய கட்சிகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளவும் அந்தக் கட்சி முயன்று வருகின்றது.

இந்த நிலையில் தம் மீதான குற்றச்சாட்டுக்களை முதலமைச்சர் சரத்ஏக்கநாயக்க மறுத்திருக்கின்றார். (க-9)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் பெரிய புராணத் தொடரில் சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேல் ஆன்மீகச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (க-7,35)

சண்டிலிப்பாய்
சங்கானை
சித்தன்கேணி
அராலி
வட்டுக்கோட்டை
மாதகல்
பண்டத்தரிப்பு
சில்லாலை
தாவடி
இணுவில்
மருதனார்மடம்
சுன்னாகம்
மல்லாகம்
தெல்லிப்பழை
நாவாந்துறை
கொழும்புத்துறை
பாசையூர்
வண்ணார்பண்ணை
கொட்டடி
நாயன்மார்கட்டு
கல்வியங்காடு
நீர்வேலி
சிறுப்பிட்டி
ஆவரங்கால்
அச்சுவேலி
இடைக்காடு
புத்தூர்
ஊரெழு
அச்செழு
புன்னாலைக்கட்டுவன்
குப்பிளான்
ஓட்டுமடம்
நீராவியடி
அத்தியடி
அரியாலை

**வடமராட்சி**

கரவெட்டி
கரணவாய்
நெல்லியடி
நவிண்டில்
மணற்காடு
கொற்றாவத்தை
பொலிகண்டி

**தென்மராட்சி**

நாவற்குழி
மறவன்புலோ
கைதடி
நுணாவில்
சாவகச்சேரி
மீசாலை
மட்டுவில்
சரசாலை
கொடிகாமம்
வரணி
மிருசுவில்
எழுதுமட்டுவாள்
முகமாலை
பளை

**தீவகம்**

நெடுந்தீவு
மண்டைதீவு
ஊர்காவற்றுறை
வேலணை
புங்குடுதீவு
அனலைதீவு
எழுவைதீவு
சுருவில்
நயினாதீவு

**வன்னி**

கிளிநொச்சி
வட்டக்கச்சி
முருகண்டி
மல்லாவி
மாங்குளம்
வவுனிக்குளம்
கனகராயன் குளம்
நெடுங்கேணி
புளியங்குளம்
முள்ளியவளை
புதுக்குடியிருப்பு
விசுவமடு

பகைஎன்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற்று அன்று - குறள்

வலம்புரி

# போரை மூட்டும் பிரயத்தனம்

இலங்கைத்தீவில் மீண்டும் யுத்தத்தீயை உருவாக்கி அதில் சுகமாகக் குளிர்காயவேண்டும் என்ற இலக்கில், இரகசியத் தூண்டல்கள், நடவடிக்கைகள் அகத்தே இடம்பெறுகின்றன.

அதன் அறிகுறிகள் தடிமன், காய்ச்சல் போல வெளிப்படத் தொடங்கியிருக்கின்றன. இதன் குணங்குறிகளுடனேயே திருகோணமலையில் புத்தர்சிலை அமைப்பு விவகாரமும், வன்முறை பதற்றமும் உருவாகியிருக்கிறது.

மேலும் தென்னிலங்கையில் பொதுக்கட்டமைப்புக்கு எதிரான பிரசாரமும், போருக்கு ஆதரவான சமிக்ஞைகளும்கூட யுத்தத்தை அடிப்படையாகக் கொண்ட வெளிப்பாடுகள்தான்.

இலங்கைத்தீவில் யுத்தமற்ற நிலைமை தொடர்வதும், சமாதானத்திற்கான பாய்ச்சலில் நகர்வுகள் அமைவதும் இனவாதிகளுக்கும், மேலாண்மைத் தரப்பினருக்கும் அடிவயிற்றில் புளியைக் கரைப்பதாகவே உள்ளது.

சமாதானத்துடன் இறைதூதன் பூமிக்கு வரப்போகிறான் என்பதைக் கேள்வியுற்றதும், இனி எனக்கில்லை மதிப்பும், செல்வாக்குமென, சாத்தான் இபிலீசு கண்ணீர்விட்டுக் கலங்கியதைப் போலவே சமாதான நகர்வுகள் அதற்கான பின்னணிச் சூழல் இனவாதிகளுக்கு மிக்க கவலையை உருவாக்கியிருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானத்தின் மீது நம்பிக்கை வைத்து பொறுமைகாத்திருப்பதும், அவர்களின் சமாதானப் பற்றுறுதியை சர்வதேச சமூகம் பாராட்டியிருப்பதும், தமிழ்மக்களின் நியாயமான அபிலாஷைகள், கோரிக்கைகளை சர்வதேசம் தெளிவாகப் புரிந்துகொண்டிருப்பதும் இனவாதிகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

எங்கே நீர்க்குமிழிபோல சமாதானம் மறைந்து யுத்தம் ஆரம்பிக்குமென்று அங்கலாய்த்துக்கொண்டிருந்தவர்களுக்கு, யுத்தமும் இல்லாத, சமாதானமும் இல்லாத இவ் இடைவெளி பெரும் நெருடலையும், சந்தர்ப்பத்தையும் உருவாக்கிக் கொடுத்திருக்கிறது.

இதனால் இந்த இடைவெளியை நன்கு உபயோகித்து யுத்தத்திற்கான தயார்படுத்தலை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இனவாத சக்திகள் ஆங்காங்கே தேவையற்ற விடயங்களை உருவாக்கி பதற்றத்தைத் தோற்றுவித்து, வன்முறைகளைப் பரப்பி அதனூடே யுத்தத்தைத் தொடங்க முனைந்திருக்கின்றன.

இந்த வகையிலேயே திருகோணமலையில் புத்தர் சிலைகளை திடீர்திடீரென நிறுவி மதரீதியாக மக்களை அவர்களின் உணர்ச்சிகளைத் தூண்டி யுத்தத்தை ஆரம்பிக்கத் தூபமிட்டிருக்கின்றன.

இனவாதிகளின் இத்தகைய நடவடிக்கைகள் கண்டிக்கத்தக்கது. சமாதான சூழலில் இந்த வேண்டாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதை நிறுத்தவேண்டும்.

உண்மையில் இது மதத்தை உயர்வுபடுத்த, வளர்ச்சியடையச் செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கை என்று சிங்கள சகோதரர்கள் எவரும் கருத்து மாயைக்குள் சென்றுவிடக் கூடாது. மக்களை மதரீதியாக பித்துப்பிடிக்க வைத்து அவர்களின் அழிவில் ஆதாயம்தேட நினைப்பவர்களின் அற்பமான நரித்தந்திர நடவடிக்கையே இதுவாகும்.

இதனையும், இதன் பின்புலத்தையும், எய்தலின் நோக்கையும் மக்கள் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். மக்களைத் தவறான வழியில் திசை திருப்புவோரை ஒருநாள்இல்லை, ஒருநாள் அம்மக்களே சரியாகத் தண்டிப்பார்கள்.

மக்கள் என்ற போர்வைக்குள் மறைந்துகொண்டு இனவாதிகள் போடும் அராஜகத்தை அவர்களின் உள்ளார்ந்த திட்டமான போர்ப் பிரயத்தனத்தை நிச்சயமாக மக்கள் விரைவில் அறிந்துகொள்வார்கள். சாயம் ஒருநாள் வெளுக்கும்.

# உறுதி மொழிகளை வழங்கும் மாநாடல்ல; இலக்குகள் சில முழுமையாக்கப்பட்டுள்ளன

## இராஜதந்திரவட்டாரங்கள் தகவல்

(கண்டி)

கண்டியில நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங் கும் மாநாடானது புதிய உறுதிமொழிகளை வழங்கும் மாநாடல்ல ஆயினும் சில இலக்குகள் முழுமையாக்கப்பட்டிருக்கின்றன என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பணம் இங்கு ஒரு பிரச்சினையாக இருந்திருக்கவில்லை அதனை நடைமுறைப்படுத்துவதே பெரிய பிரச்சினையாக உள்ளது.

அரசின் புதிய நடைமுறைகளை உன்னிப்பாக அவதானிதது வருகிறோம் அவற்றின் அடிப்படையில் எவ்வாறு உதவலாம் என்று அவதானித்து வருகிறோம்; என அவை தெரிவித்தன.

போரினால பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக் கட்டியெழுப்ப 2003 யூன் மாதத்தில் 4.5 பில்லியன் டெலர்களுக்கான உறுதிமொழி வழங்கப்பட்டும் சமாதான செயற்பாடுகளில் முனனேற்றமின்மையால் அத்தொகை இன்னும் கிடைத்த பாடில்லை.

இந்நிலையில் இப்பொழுது சுனாமிப்பேரழிவுகளை சீர்செய்ய வழங்கப்படும் தொகைக்கும் இதே தலைவிதி நேரலாம் என்று ராஜதந்திரிகள் தெரிவித்தனர்.

'நிலையான சமாதான தீர்வொன்று வரையும் படிப்படியான முறையிலான நடவடிக்கைகளுக்கான கதவுகளை நான் திறந்துவிடுவேன்" என்று அண்மைய தொலைக் காட்சி பொட்டி ஒன்றில் ஜனாதிபதி தெரிவித்தார்.

திங்களன்று மகாநாட்டில் உரையாற்றுகையில் அரசாங்கத்தினுள்ளிருந்தோ,வெளியிலிருந்தோ வரக்கூடிய அச்சுறுத்தல்கள் எவ்வாறு இருப்பினும் விடுதலைப்புலிகளுடனான பேச்சுக்கள் நடைபெறும் என ஜனாதிபதி கூறியிருந்தார்.

ஜனாதிபதியின் அறிவிப்பு உறுதியானதாக இருக்கலாம் ஆளும் கூட்டணி அரசு அவரது திட்டத்தை முடக்கக் கூடிய வாய்ப்புக்களை மறுப்பதற்கில்லை என்கிறார்கள் இருந்த போதும் சந்திரிகாவின் கட்சியினர் அவரது நிலையை முழுமையாகவே ஆதரிக்கின்றனர்.

பொதுககட்டமைப்பு என்பது இருதரப்பு மக்களுக்கான உதவி மட்டுமல்ல இரு தரப்பினரும் பரஸ்பர நம்பிக்கைகொண்டு நெருங்கிவருவதற்கான ஒரு சூழலும் கூட இரு தரப்பிலும் யுத்த மீறலகள் அதிகமான எண்ணிக்கையில் நடந்த போதும் ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கிறது. இருதரப்பினரும் முழு அளவிலான ஒரு யுத்த நிலைக்குத்தயாராக இல்லை என்கிறார் இலங்கையின் சமாதான செயலகப்பணிப்பாளரான ஜயந்த தனபால.

பொதுக்கட்டமைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசும் கையெழுத்திடும் சூழல் ஏற்பட்டுள்ளபோதும் ஜே.வி.பியின் நிலை குறித்து கொழும்பு ஊடகங்கள் விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றன.

டெய்லிமிரலில் நேற்றுமுன்தினம் எழுதப்பட்டுள்ள கட்டுரை ஒன்றில் பொதுக்கட்டமைப்புத்தொடர்பாக பல விடயங்ளை சுட்டிக்காட்டியபோதும் ஜே.வி.பியின் நிலை குறித்து குறிப்பிடுகையில்,இந்திய அரசு முதலில் பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பதாக செய்திகள் வெளியாகின.

விடுதலைப்புலிகளின் மேலாதிக்கத்தை இலங்கைத் தீவகத்தில் தமது அரசு விரும்பவில்லை என்று கூறியதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன.ஆனால் இந்திய அரசு உடனடியாக அதை மறுத்தது. இம்மறுப்பின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான இந்த உடன்படிக்கையை ஆதரிக்கும் தனது நிலையை மறைமுகமாகத் தெரிவித்திருக்கிறது.

இநதிய அரசிடம் இருந்து ஜே.வி.பியானது கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் ஒன்றும் இருக்கிறது.இந்தியாவில் பல்வேறு ஆயுதக் குழுக்கள் இயங்கி வருகின்ற போதும் இந்திய கூட்டரசின் கொள்ளைக்குட்பட்டும் இந்திய அரசியல் யாப்பிற்குட்பட்டும் பல ஒபபந்தங்களை பல்வேறு குழுக்களுடன் இந்திய அரசு மேற்கொண்டுள்ளதை இந்த சூழலில் ஜே.வி.பி உணர வேண்டும் என்று அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கைத்தீவகத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு அவசர மனிதாபிமான உதவிகளை வேண்டி நிற்கிற தமிழ் மக்களுக்கு சிறிதளவு ஆறுதல் அளிக்கக்கூடிய பொதுக் கட்டமைப்பையும் இறையாண்மை, தேசியமொன்கிற பெயரில் பேரினவாத பயங்கரவாதம் முடடிக்கிப்போட்டு விடககூடும் என்பதையும சர்வதேச சமூகம் ஒரு புறம் அச்சம் கலந்த சூழலில் அவதானித்துக்கொண்டுதான் இருக்கிறது என அவ் இரஜாதந்திர வட் டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ர-4,6)

## கர்ப்பவதிகளுக்கான சிகிச்சைக்காக

# யாழில் தாய்-சேய் நல சிகிச்சை நிலையங்களில் வைத்திய அதிகாரி கடமை புரிவது அவசியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இயங்கும் தாய்-சேய் நல சிகிச்சை நிலையங்களில் நடைபெறும் கர்ப்பவதிகள் சிகிச்சையின் போது அருகில் இயங்கும் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகடமை புரிவது அவசியம் என யாழ். மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் சுகாதார வைத்திய அதிகாரிகள் இல்லாத காரணத்தால் அநேகமான கர்ப்பவதிகளுக்கு இச் சிகிச்சை நிலையங்களில் வைத்தியர்களால் பார்வையிடப் படாமலேயே மருத்துவ சேவைகள் இதுவரை வழங்கப்பட்டு வந்துள்ளன.

ஒரு சிகிச்சை நிலையத்தால் உரிய முறையில் சிசுவின் வளர்ச்சி பற்றியும் அசாதாரண சூழ்நிலைகள் ஏற்படும் சாத்தியககூறுகள் தொடர்பாகவும் முன்கூட் டியே அறிவிக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதால் இம்முடிவு எடுக்கப்பட்டதாக அவர் தெரிவிததார்.

எனவே இச்சிகிச்சை நிலையங்களுக்கு அருகில் கடமை புரியும் வைத்திய அதிகாரி மேற்படி சிகிச்சை நிலையங்கள் செயற்படும் நாட்களில் மட்டும் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவை நிறுத்தி கர்ப்பிணிப் பெண்களைப் பரிசோதிக்க வேண்டும் எனவும் மேலும் சிகிச்சை நிலையத்திற்கு புதிதாக முதல் தடவை வரும் தாய்க்கு மலேரியா இரத்தப் பரிசோதனை செய்வது மிகவும் அவசியம் எனவும் கூறினார்.

கர்ப்பகாலத்தில் மலேரியா ஒரு தாய்க்கு ஏற்பட்டால் சிசுவுக்கும் தாய்க்கும் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடும் என்பதறகாகவே இரத்தப் பரிசோதனை செய்தல் அத்தியாவசியமானது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ர-7,252)

# இந்தியத் தமிழ் சினிமாவின் மாயவலையில் விழுந்து எழ முடியாத நிலையில் இன்றைய இளைய தலைமுறை

(யாழ்ப்பாணம்)

தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்கள் போடுகின்ற தாளத்திற்கு ஓயாது ஆடிக்கொண்டிருக்கும் இளைஞர் கூட்டத்தையே எமது சமூகத்தில் இன்று காண முடிகின்றது. எமது சமூகம் கனவுத்தொழிற்சாலையான இந்தியத் தமிழ் சினிமாவின் மாயவலையில் விழுந்து எழ முடியாமல் மயங்கிக் கிடக்கிறது. இது ஆரோக்கியமான எதிர்காலத்திற்கான அறிகுறி அல்ல.

"சலனசித்திரம்" அமைப்பின் யாழ். மாவட்ட பொதுச் செயலாளா எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி இவ்வாறு தெரிவித்தார்.

உரும்பிராய் திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் கடந்தவாரம் நடைபெற்ற நல்ல சினிமாவுக்கான தேவை என்ற தலைப்பிலான கருத்தரங்கில் கருத்துரை வழங்குகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இந்த இக்கட்டில் இருந்து விடுபடுவதற்கு நாம் புதிய சினிமா கலாசாரத்தை நோக்கிப் பயணிக்க வேண்டியவர்களாக உள்ளோம். சின்னத்திரையும் சினிமாவும் சமூகத்தைச் சீருழிக்கின்றன. மாணவர் கல்வியைப் பாதிக்கின்றன. என்று குறைகூறிக்கொண்டிருப்பதால் பலன் எதுவும் இல்லை நல்ல திரைபடங்களை நோக்கிச் சமூகத்தின் பார்வையைத் திருப்ப வேணடும் நல்ல சினிமாவின் மீது மக்களின் இரசனை செல்லும் போது தரக்குறைவான படங்கள் தானாகவே அமிழ் ந்து விடும் இதற்குத் திரைக்கலைச்சங்கங்களின் பங்கும் பணியும் முக்கியமானது.

பொது மக்கள் அங்கம் வகிக்கின்ற இவ்வாறான சங்கங்கள் தரமான படங்களைத் திரையிட்டு சமுதாயத்திற்கு அறிமுகப படுத்தவேண்டும் திரைக்கலைச்சங்கம் என்ற வகையில் நாம் கல்லூரித் திரைப்படக் கழகங்களை யாழ்ப்பாணத்திலும கொழும்பிலும் அங்குரார்ப்பணம் செய்துள்ளோம். இந்த முன்னுதாரணத்தை ஏனைய பள்ளிகளும் கல்லூரிகளும் பின்பற்ற வேண்டும்.

வாரத்தில் ஒரு திரைப்படத்தை மாணவர்களுக்காகத் திரையிட வேண்டும்.

அத்துடன் திரைப்பட ரசனை சம்பந்தமான பாடம் கல்வித் திட்டத்தில் புகுத்தப்படவேண்டும் சினிமாவுக்கு உள்ள சக்தியைப் பயன்படுத்தி மக்களை அடிநிலைக்குக் கொண்டு செலலும் சுரண்டலுக்கு எதிராகப் புத்திஜீவிகள் அணி திரள வேண்டும் வன்முறை அற்ற சிந்திக்கும் போக்குடைய மக்கள கூட்டம உருவாக வேண்டுமாயின் இந்தச் சவாலை நாம் எதிர் கொண்டே ஆகவேண்டும் அப்போது சிந்தனைப் புரட்சியை நோக்கி வீறு நடைபோடுகின்ற இளைஞர் கூட்டத்திற்கு "நல்ல சினிமா" வழிகாட்டும் அப்போது மானிட நேயத்தையும் சமூக விழுமியங்களையும் வரலாற்றையும் காட்டும் முற்போக்கான சினிமாவே எடுக்கப்படும் அது தமிழன் வாழ்க்கை முறையை சர்வதேசமெங்கும் பறைசாற்றும் தமிழ் சினிமாவாகப் பரிணமிக்கும் விருதுகளையும் வெல்லும் என்றார். (ர)



## சாயி அருளமுதம்

திருப்தி என்பது சொர்க்கமாகும்;துயரம் நரகம் ஆகும். கோபமே விரோதி;அமைதியே கவசமாகும்; இரக்கமே தோழனாகும். நீங்கள் "சாந்தி" என மும்முறை கூறுகிறீர்களல்லவா? அப்படிச் சொல்வது நீங்கள் வாழுகின்றமனுச, தெய்வீக இயற்கையான சூழ்நிலையில் சமதானத்தை ஏற்படுத்துவதற்கேயாம்; அத்துடன் உடல், மனம், புத்தி, ஆகியவற்றில் சாந்தியைப் ஏற்படுத்துவதற்குமாகும்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை



நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற மாமனிதர் சிவராமின் நினைவுநிகழ்வின்போது யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கண்ணன், தமிழீழத் தேசியக் கொடியினை ஏற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட யாழ். மாவட்ட ஊடகவியலாளர்கள், படைப்பாளர்கள், கலை இலக்கியவாதிகள் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

படங்கள்: தீபன், நோயல்

# கடன் மீளச் செலுத்தும் காலத்தை இந்திய அரசாங்கம் நீடித்துள்ளது

(கொழும்பு)

இலங்கை அரசு இந்தியாவுக்கு திருப்பிச் செலுத்தவேண்டிய கடன் தொகைக்கான காலத்தை இந்திய அரசு நீடித்துள்ளது.

நடப்பாண்டில் இலங்கை அரசு 30 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தியாவுக்கு வழங்கவேண்டும். இத்தொகையை இனிவரும் 3 ஆண்டுகளுக்குள் திருப்பிச்செலுத்தலாமென இந்தியா அறிவித்துள்ளது.

கண்டியில் நடைபெற்ற இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டின்போது இந்தியா இந்த அறிவித்தலை விடுத்ததாக நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலையால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கையை மீள் புனரமைக்கும் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்குடன் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக நிதியமைச்சர் மேலும் கூறினார். (ச-4)

## முக்கிய கூட்டம்

நேற்று நடைபெறவிருந்த பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களுக்குமான மாணவர்களது பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் முக்கியமான பொதுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறுமென யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (ற)

## ஓட்டோச்சாரதிகள் நேற்றும் வேலைநிறுத்தம்

மட்டக்களப்பு மாநகரசபை பிரதேச முச்சக்கரவண்டி சாரதிகளின் வேலை பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாக தொடர்ந்தது. இதனால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முச்சக்கரவண்டி சாரதிகளின் பகிஷ்கரிப்பு போராட்டத்துக்கு வேறு பல பிரதேசங்களின் முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கங்கள் ஆதரவு தெரிவித்து பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு அரசடிச் சந்தியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் முச்சக்கரவண்டிச் சாரதி ஒருவர் கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமானது தெரிந்ததே. (ச-2)

## கற்பக விநாயகர் கொடியேற்றம்

கோப்பாய் தெற்கு கற்பக விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

அடுத்த மாதம் 2 ஆம் திகதி ரதோற்சவமும், 3ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (இ)

# தேசியத்திற்கு எதிரான நடவடிக்கைகள் தேசியத்தை தலைநிமிர்த்த வைத்துள்ளது

## இளம்பரிதி உரை



தமிழ்த் தேசியப் பற்றாளர்களைச் சாகடிக்கும் சிங்களப் பேரினவாதம் சாகடிக்கப்படும். இவ்வாறு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

யாழ். நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற மாமனிதர் சிவராம் நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் தற்போது உயிரைக் கொடுத்தாவது பொதுக்கட்டமைப்பினை உருவாக்குவேனென ஜனாதிபதி சந்திரிகா கூறும் கருத்து ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல.

பொதுக்கட்டமைப்பு என்பது பேரழிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபினமான உதவிகளை மேற்கொள்வதற்கான ஒரு திட்டம் மாத்திரமே.

இப் பொதுக்கட்டமைப்பு விடயம் சர்வதேச ரீதியில் பெரியவிடயமாக சித்திரிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தமிழ்மக்களின் அரசியல் அபிலாஷைகள் எதுவும் பூர்த்திசெய்யப்படப்போவதில்லை.

இதனை உணர்ந்தே நாட்டில் 80 வீதமான மக்கள் இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இந்நிலையில் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த உயிரைக் கொடுப்பதென்பது போலியான கூற்றாகுமென்றார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக் காலத்திலேயே அதிகளவில் தமிழ் அறிஞர்கள், ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவரது ஆட்சிக்காலத்திலேயே ஊடகவியலாளர் நிமலராஜன், நாட்டுப் பற்றாளர் நடேசன், மாமனிதர் சிவராம் [illegible]கியோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியத்திற்கு எதிராக சிங்கள அரசினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை எல்லாம் தேசியத் தலைநிமிர்விற்கே வழிசெய்[illegible]ளது. தேசியப் பற்றாளர்கள[illegible] சாகடிக்கும் சிங்களப் பேரி[illegible]தம் சாகடிக்கப்படப்போ[illegible] என்று அவர் மேலும் தெ[illegible]தார். [illegible])

## ஓவியக் கண்காட்சி நேற்று ஆரம்பம்

(கிளிநொச்சி)

ஓவியர் புகழேந்தியின் ஓவியக் கண்காட்சி கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தில் நேற்று ஆரம்பமானது. முற்பகல் 10.40 மணியளவில் ஆரம்பமான[illegible]ந் நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் ஏற்றிவைத்தார்.

ஓவியக் கண்காட்சியினை கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் நாடா வெட்டி ஆரம்பித்துவைத்தார்.

ஆரம்ப நிகழ்வுகள் கிளிநொச்சி அழகியல் கலாமன்ற அதிபர் கா. விஜயசேகரன் தலைமையில் நடைபெற்றன.

ஓவியக் கண்காட்சி ஆரம்ப உரையினை தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க. வே.பாலகுமாரன் நிகழ்த்தினார்.

இவ்ஓவியக் கண்காட்சியினை பெருமளவு பாடசாலை மாணவர்களும், மக்களும் பார்வையிட்டு வருகின்றனர். இக்கண்காட்சி இன்று 2 ஆம் நாளாகவும் இடம்பெறுகின்றது. (ச-4)

## திருமலையில்....

மடைந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை நேற்று முன்தினம் பிறப்பிக்கப்பட்டிருந்த பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நேற்றுத் தளர்த்தப்பட்டுள்ளது. (ச-4)

## மாமனிதர்...

மும் அணிவித்தார்.

நிகழ்வில் ஊடகவியலாளர்களான கதிர்காமத்தம்பி, தவச்செல்வம், கானமயில்நாதன் ஆகியோரும், படைப்பாளர் ஐ.சாந்தன், தேசிய கலை. இலக்கியப் பேரவையைச் சேர்ந்த தணிகாசலம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜெயானந்தமூர்த்தி, சிவநேசன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த இளம்பிறையன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

நிகழ்வில் பேராசிரியர் கா.சிவத்தம்பியினால் அனுப்பப்பட்ட அஞ்சலிச் செய்தியும் வாசிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பத்திரிகையாளர்கள், இலக்கியவாதிகள், கல்விமான்கள் உட்படப் பெருமளவானோர் கலந்துகொண்டனர். (ச-8,4,122)

## அன்ரன்...

திகதிகளில் கண்டியில் நடைபெற்ற உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டின்போது உலகநாடுகள் உறுதியளித்த 30 பில்லியன் ரூபாவை புனரமைப்பு மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் அவசர மனிதாபிமானத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படவேண்டுமென அன்ரன் பாலசிங்கம் கேட்டுள்ளார்.

இதேவேளை கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து இலங்கை அரசிற்கு விரைவில் தெரியப்படுத்துவதாக எரிக் சொல்ஹெய்ம் உறுதியளித்துள்ளார்.

அத்துடன் தனது இந்திய விஜயம் குறித்தும் அன்ரன் பாலசிங்கத்திற்குத் தெரியப்படுத்தியுள்ளார். (ச)

## பொலிஸ்....

கான்ஸ்டபிள், தாக்குதலை மேற்கொண்டவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோதும் அவர் தப்பிச் சென்றுவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-4,9)

## சமாதான...

வேண்டும் என்பதற்கேயாகும்.

உதவிவழங்கும் நாடுகள் ஒரு நிபந்தனையையும் விதிக்கவில்லை. எனினும் கிடைக்கும் நிதி சமமாகப் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். நிதி செலவிடப்படும் விதம் குறித்து அறிய நாங்கள் ஆர்வமாகவுள்ளோமென இராஜதந்திரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை பேச்சுக்களை விடுத்து மாற்றுப்பாதையில் அரசாங்கம் சென்றால் உறுதியளிக்கப்பட்ட நிதியெதுவும் இலங்கை வந்து சேராதென நிதியமைச்சர் சரத் அமுனுகமவும் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் சமாதானம் மலர்ந்து இனப்பூசலுக்கு நிரந்தரத் தீர்வு எட்டப்படுவதே உதவிவழங்கும் நாடுகளின் விரும்பம். இதனையே கண்டிக் கூட்டத்தில் உதவிவழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை அரசுக்குத் தெரியப்படுத்தினார்களென இராஜதந்திரிகள் மேலும் குறிப்பிட்டனர்.

உதவிவழங்கும் நாடுகள் வழங்கும் உதவிகள் இலங்கையின் அபிவிருத்திக்கு மாத்திரமல்ல. நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும் என்பதற்காகவுமே எனவும் உதவிவழங்கும் நாடுகள் அழுத்தந்திருத்தமாக இலங்கை ஜனாதிபதிக்கும், பிரமுகர்களுக்கும் கூறியதாக இராஜதந்திர வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன. (ச)

## புத்தர்...

லால், தமிழ்மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

திருகோணமலையில் அமைதிக்குப் பங்கம்ஏற்படாதவாறு பொதுமக்களின் நலனைக்கருத்திற்கொண்டு அமைக்கப்பட்ட சட்டரீதியற்ற கட்டடங்களை அகற்ற நகரசபை நடவடிக்கை எடுக்கும். அதன்போது பொலிஸார் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

மேலும் இரண்டு தரப்பாருடனும் கலந்துரையாடி நகரசபைக்குச் சொந்தமான முச்சக்கரவண்டித் தரிப்பிடத்தில் அமைக்கப்பட்ட புத்தர்சிலையை தற்காலிகமாக அகற்றுவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச-4)

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
ஷாம், ரிச்சட், ரோகிணி நடித்த
கிரிவலம்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
எமது அடுத்த வெளியீடு
இன்னும் ஒருசில தினங்களில்...
அறிந்தும் அறியாமலும்

நிறைஞ்சனாஸ்
சங்கானை
ரவி, சதா நடித்த



ஜெயம்
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

மனோகரா யாழ்.
06.05.2005 முதல்
சரத்குமார், ரமேஷ், பூஜா மற்றும் பலர் நடித்த



ஜித்தன்
கா.நேரம்: 9.30, 2.30, 6.30, 9.30
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

திருமணக்கார் (குளிரூட்டியது)
வாடகைக்கு
☆ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
☆ விசேட வைபவங்கள்
☆ சுற்றுலாக்கள்
போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீனகார், சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்.



தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை 22, சோமசுந்தரம் அவனியூ
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
T.P: 0777-903090, 077-3086939, 0777-246117, 077-6018467

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.